லண்டனில் அதிக வாசகர்களை கொண்ட ஒரே ஒரு மாத சஞ்சிகை


FREE ISSUE

September 2008



# லண்டன் தகவல்

## London Tamil's Information



அறிஞர் அண்ணாவின்
நூற்றாண்டு விழா
15.09.2008 ஆரம்பம்



## பிள்ளையார்பட்டி
## பிச்சைக்குருக்கள் அவர்களின்
## ஷஷ்டியப்த பூர்த்தி சிறப்பு மலர்

மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest

# LAKSHMIS JEWELLERS

276 High Street North
London E12 6SA UK
Tel : 020 8470 5600
Fax : 020 8470 3448



ஆயிரங்காலத்துப்
பயிருக்கு
ஆண்டாண்டு
பாரம்பரியம்
உள்ள
தங்க நகைகள்



பிள்ளையார்பட்டி
பிச்சைக்குருக்கள் அவர்களின்
ஷஷ்டியப்த பூர்த்தி சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...

பக்கம் 1 – 16 சிவஸ்ரீ பிச்சைக் குருக்களைப் பற்றிய செய்திகள் மற்றும் புகைப்படங்கள்.

பக்கம் 24 – 25 வாசகர் கடிதம்

பக்கம் 41 சைவநீதியில் திருமுறை

பக்கம் 44 – 46 பயணக்கட்டுரை


# தமிழர் தகவல்
## Tamil Information

" பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"– குறள்

திருவள்ளுவர் ஆண்டு 2039
சர்வதாரி — புரட்டாசி
மலர் : 06
இதழ் : 63
செப்டெம்பர் 2008



முகவரி :
41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி :

Email : **jothy5@yahoo.co.uk**



வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

ஆசிரியர் : அரவிந்தன்

Editor : Aravindan

கணினி, அச்சுப்பதிப்பு :
கமலா ஆர்ட்ஸ்

Computer Layout :
Kamala Artz



படைப்புகள்
ஆக்கியோரின்உரிமைகளே



4000 பிரதிகள்


தமிழர்களே ! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்

வெம்பிளியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட BEST FOODS நான்காவது கிளையின் வாராந்த வியாபாரம் £ 30 ஆயிரத்தைத் தாண்டிவிட்டது. இதற்கு என்ன காரணம் என்று கேட்டபோது தமிழர் தகவல் விளம்பரம்தான் என்று சந்தோஷமாக பதில் அளித்தார் அதன் உரிமையாளர் ஜெயம் அவர்கள். கடந்த ஒரு வருடமாக வெம்பிளி கிளையின் விளம்பரம் ஒரு பக்கமாக வந்தது குறிப்பிடத்தக்கது






வாசகர்களே ! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பார்ந்த வாசகர்களே...

இந்த பத்திரிகை தொடங்கி 62 இதழ்களிலும் ஆசிரியர் தலையங்கமாக பல கருத்துகள், கொள்கைகள் மக்களுக்குத் தந்திருக்கிறோம். இந்த இதழிலிருந்து கொஞ்சம் மாற்றி அமைத்து வாசகர்களுடன் மனம் விட்டுப் பேச நினைக்கிறோம். வாழும்போது மதிப்புள்ளவர்களை வாழ்த்த வேண்டும் என்பது தமிழர் தகவலின் கொள்கை. அந்த வகையில் தமிழ்நாட்டின் தலையாய சிவாச்சாரியார் பிச்சைக் குருக்கள் ஐயா அவர்களை வாழ்த்துவதில் தமிழர் தகவல் பெருமை கொள்கிறது. அவரது 60-வது ஷஷ்டியப்த பூர்த்தி விழாவிற்காக சில பக்கங்களை ஒதுக்க நினைத்தோம். இதற்கான முழுமுதற் காரணம் அவர் தமிழநாட்டு குருக்களாக இருந்தாலும் புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களுடன் இரண்டறக் கலந்துள்ளார். புலம் பெயர்ந்த நாட்டில் வாழும் அநேகமான கோயில்களுக்கு கும்பாபிஷேகம் செய்து வைத்துள்ளார். ஆகவே அவரைப் பற்றிய இந்த விசேட மலர் நியாயமானதே. புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள பல கோயில்கள், குறிப்பாக கனடாவில் ஐயப்பன் கோயில், துர்க்கையம்மன் கோயில், லண்டனில் முருகன் கோயில், முத்துமாரியம்மன் கோயில், வால்த்தம்ஸ்டோ பிள்ளையார் கோயில், அவுஸ்திரேலியா, அமெரிக்கா, இலங்கையில் குறிப்பாக எங்கள் தீவுப் பகுதிக்கும் அவர் சென்று வந்துள்ளார். ஆகவே அவருக்கு இந்த பக்கங்களை சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம். இவருடைய குருகுலத்தில் படித்த 16 சிவாச்சாரியார்கள் லண்டனில் கடமை புரிவது குறிப்பிடத்தக்கது. அவர்களையும் மகிழ்விக்கவே இந்த இதழ்.




இவரைப் பற்றிய இந்த மலரில் முதலில் தவத்திரு பொன்னம்பல அடிகளாரின் வாழ்த்து, தமிழ் நாட்டின் தலை சிறந்த ஆன்மீகப் பேச்சாளர் திரு சுகி சிவத்தின் வாழ்த்து, லண்டனில் முதல் கோயிலான ஆர்ச்வே முருகன் கோயில் தலைவரின் வாழ்த்து, முத்துமாரியம்மன் கோயில் திரு சீவரத்தினம் அவர்களின் வாழ்த்து, சிறந்த தமிழறிஞர் திரு ஜெகதீஸ்வரன் அவர்களின் வாழ்த்து, லூசியம் சிவன் கோயில் தேவலோக குருக்கள் அவர்களின் கட்டுரை, திரு. சிறீரங்கன் அவர்களின் கட்டுரை பிரசுரமாகியிருக்கிறது.

செப்டம்பர் மாதம் 15ஆம் தேதி நாம் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழா ஆரம்பமாகிறது. இதன் காரணமாக தொடர்ந்து வரும் இதழ்கள் அவரைப் பற்றிய கட்டுரைகள், துணுக்குகள், நகைச்சுவை செய்திகளை தாங்கி வரும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். வாசகர்களாகிய நீங்களும் அவரைப் பற்றிய செய்திகள் தெரிந்தால் அனுப்பி வைக்கவும்.

தமிழர் தகவலில் எழுத்துப் பிழை வருகிறது. ஆதலால் மற்றவர்கள் விடும் எழுத்துப் பிழைகளை சுட்டிக்காட்டுவது கண்ணாடி வீட்டிலிருந்து கல் எறிவது போல என்று ஒரு நண்பர் எனக்கு அறிவுரை கூறினார். எழுத்துப் பிழைக்கும், கருத்துப் பிழைக்கும் வித்தியாசங்கள் உண்டு. எழுத்துப் பிழையை திருத்தி வாசித்து விடலாம். கருத்து பிழையை திருத்த முடியாது. ஆகவேதான் சில கருத்துப் பிழைகள் வரும்போது சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. மிகவும் அதிகமாக குடிப்பழக்கமுள்ள நோயாளி வரும்பொழுது நீ குடிக்காமல் இருப்பது நல்லது என்று குடிப்பழக்கமுள்ள டாக்டர் புத்திக் கூறுவது இல்லையா? தமிழர் தகவலை கடந்த ஆறு வருடங்களாக ஏதோ சிரமப்பட்டு புலம்பெயர்ந்த மக்களுக்கு இலவசமாக அளித்து வரும்போது எங்கள் இனத்திலுள்ள சில குறைபாடுகளையும் சுட்டிக்காட்ட வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம். ஒரு பத்திரிகையின் இலட்சணம் தனிப்பட்ட பழிவாங்கள்கள் அல்ல. பொது விடயங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்வதே ஒரு பத்திரிகையின் தலையாய கடமை. இந்த வகையில் தமிழர் தகவல் தமது கடமையை சரிவர செய்கிறதென்றே நினைக்கிறோம்.

என்றும் உங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவ சிவ

"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"


தவத்திரு
குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்
✆ : 04577 - 264227


# வாழ்த்துச் செய்தி

நாள் : 12-08-2008



## வாழிய பல்லாண்டு

அடக்கமே உருவான எளிமையின் திருஉரு! அனைவரிடமும் அன்பைப் பகிர்ந்துக் கொள்கின்ற எளிய வெள்ளை உள்ளம்! அருள்தரு கற்பக விநாயகருக்குக் கிடைத்திட்ட அற்புதக் கற்பகம்! உலகம் போற்றும் ஆன்மீகத் தொண்டு! விண்முட்டும் கோபுரங்களில் புனித கலச நீர் சொரியும் விரிந்த கனிந்த உள்ளம்! சமயப் பணியோடு சமூகப் பணியும் ஆற்றுகின்ற ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்! அவர் தாம், அறுபதாண்டு கண்டிருக்கின்ற பேரன்பிற்கும் பெரும் போற்றுதலுக்கும் உரிய பிச்சை சிவாச்சாரியார்! பெருந்தகை அவர்கள் மணிவிழாக் கண்டிருப்பது பாராட்டுக்குரியது. ஸ்ரீ கற்பக விநாயகர் வேக ஆகம வித்யாலயம், சிவநெறிக்கழகம் இவற்றின் வழியே இறைபணியும், கருத்தரங்குகள், மாநாடுகள் அமைத்து சிறந்த ஆன்மீகப் பணியும் ஆற்றிவரும் அறநெறி அண்ணல்! விகாஸ்ரத்னா போன்ற உயரிய விருதுகள் இவரைத் தேடி நாடி வந்து பெருமை பெறுகின்றன.

அருள் நெறித் தந்தை குருமகா சந்நிதானத்தின் கல்விக் கோயிலில் பயின்றவர்! அருள்தந்தை மகாசந்நிதானத்தின் கொள்கையை சிரமேற் கொண்டு செம்மையாய் பணியாற்றியவர்! தமது ஆதீனத்தோடு இணைந்து மெய்கண்டார் விழாக்களைச் சிறப்புற நடத்தித் தக்கோரைப் பெருமைப்படுத்தி வருபவர்! ஏழை எளிய மக்களுக்குக் கல்வி, மருத்துவ உதவிகள் செய்து வரும் கருணையின் சீலர்!

மணிவிழாக் காணும் பேரருள் திரு பிச்சைச் சிவாச்சாரியார் மேன்மேலும் இறைபணியிலும், மனிதநேயப் பணிகளிலும் சிறந்து விளங்கிட எல்லாம் வல்ல இறையருளை விரும்பி வேண்டி வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு,

(பொன்னம்பல அடிகளார்)

★ திருக்குறளே நமது பொதுமறை ★ திருமுறைகளே நமது மறை ★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

சுகி. சிவம், B.A., B.L.,
98422-84984

அலுவலகம்: 24995358
24984177
இல்லம்: 2491110

ஜனனி அடுக்ககம், 313/9, டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட், சென்னை-600 018.



ஒரு கும்பாபிஷேகம் பார்த்தாலேயே பெரும் புண்ணியம் என்பார்கள். அப்படி இருக்க, அடிக்கடி கும்பாபிஷேகம் பார்க்க – செய்து வைக்க பேறு பெற்றவர் சிவஸ்ரீ பிச்சை குருக்கள் அவர்கள். செந்தமிழ் சுந்தரர் திருமரபினர். தெந்தண்மை பூண்டொழுகும் அந்தணர், கல்விமான். கல்வியின் கர்வம் கரையாகாதபடி காத்துக் கொண்ட கருணையாளர்.

தமிழை வெறுக்காத பண்பும், மரபை உடைக்காத அன்பும் அவர்தம் தனிச் சிறப்பு. மாறிவரும் சமூக உணர்வை மதிக்கத் தெரிந்த மாண்பு அவரது மேன்மை. ஒரு முறை பழகிய எவரும் மறுமுறை பழக விழையும் பக்குவம், நிதானம் அவரது தனிச் சொத்து.

போலி ஆடம்பரங்களில் அவருக்கு விருப்பமில்லை. தாழ்ந்து பணம் பெற்று தன்னை வளர்க்கும் தடுமாற்றம் அவருக்கு இல்லவே இல்லை. இறைவனிடத்தில் மக்களை ஈடுபடுத்தும் குருத்துவம் உண்டே ஒழிய வருகிறவர்களிடம் குழைந்து நெளிந்து தன்னைத் தக்க வைத்துக் கொள்ளும் பலவீனம் அவருக்குக் கிடையாது.

ஆகம, வேத, தமிழ்மறை அறிவுநலம், பக்தி, பணபு, பலர்க்குதவும் பரிவு மனம், உலகெங்கும் உலாவரும் செல்வ வளம், தமது குலத்தை உயர்த்த உதவும் தரும குணம், இவையே சிவஸ்ரீ பிச்கை குருக்கள்.

ஒரே நேரத்தில் உயர்வில் ஆணவமும் இன்றி, தாழும் குறைகளும் இன்றி, ஸ்திதப்ரக்ஞனாய், சமநிலை மாறாத சமயாச்சாரியனாய், அறிஞர் போற்றும் ஆகம ஞானியாய் வாழும் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து பக்திப் பயிர் வளர்க்க. சமய சமூக நற்பணி ஆற்ற பராசக்தியைப் பிரார்த்திக்கிறேன்.

அன்பினிய

சுகி சிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aum Muruga
BRITTANIA HINDU (SHIVA) TEMPLE TRUST
ESTABLISHED 1974, REGISTERED CHARITY NO: 269067
HIGHGATEHILL MURUGAN TEMPLE
200A, Archway Road, London N6 5BA Tel: 020 8348 9835 Fax: 020 8482 6508
Email:admin@highgatehillmurugan.org Website:highgatehillmurugan.org

BOARD OF TRUSTEES
Chairman:
Mr. K. Ranganathan
Secretary:
Mr. K. Nagarajah
Treasurer:
Mr.A.Vairavamoorthy

Dr. V. P. Narayana Rao
Mr.K.Nithiananthan
Mr. S. Sothilingam
Mr. S. M. Srikantha

ADVISORY COUNCIL:
Chairman:
Mr. K. Ranganathan
Secretary:
Mr. M. Perinpanathan
Temple Admin:

BANKERS:
Nat West Bank plc
Barclays Bank plc
State Bank of India

Solicitors:
M/S Wimal & Co

# வாழ்த்துச் செய்தி



தமிழர் தகவல் 12.08.2008
41 Haddington Road
Bromley
Kent
BR1 5RG

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு,

வணக்கம். தங்களுடைய கோரிக்கையை உடனே நிறைவேற்ற முடியாததற்கு வருத்தம் தெரிவிக்கின்றேன். சிவநெறிச்செம்மல் விகாஸ்ரத்னா - சிவஸ்ரீ கி. பிச்சைக்குருக்கள் திருமதி சரோஜா அம்மாள் மணி விழாவையொட்டி தாங்கள் ஓர் சிறப்பிதழை மலரா விடுவது ஓர் மன நிறைவு உள்ள நற்செயல் என்பதில் ஒரு வித ஐயமும் இல்லை. அதை நான் மனசார வரவேற்கின்றேன்.

சிவஸ்ரீ கி. பிச்சைசிவாச்சாரியார் அவர்கள் உலகெங்கும் தற்பொழுது பரந்து வாழ்ந்து வரும் சைவத்தமிழ் மக்களுக்கு சைவசித்தாந்தப் பெருமையை விளக்குவதிலும் அவர்களின் சிவாலயங்களில் நடைபெறும் சகல விழாக்களிலும் முக்கிய பங்கேற்று நடாத்தி, பெருமை அடையச் செய்து வருபவர். இதற்கு மேலாக, திருக்கோயில்களில் வழிபாடு இயற்றும் அர்ச்சகர்களை உரிய கல்விச்செறிவுடன் உருவாக்கல், என்னும் மாபெரும் பணியை, பிள்ளையார்பட்டி வேத ஆகம வித்யாலயம் மூலம் புரிந்து வருவது மிகவும் போற்றத்தக்கது. ஆகவே இவ்வளவு மேம்பாடுள்ள சிவஸ்ரீ கி. பிச்சை சிவாச்சாரியாரின் மணிவிழாவிற்கு சிறப்பு மலர் ஒன்றை தகவல் வெளியிடுவதற்கு. எல்லாம் வல்ல எம் பெருமான் உயர்வாசற்குன்றில் எழுந்தருளி அருள்புரியும் சிவசண்முகனை வேண்டி, வணங்கி, மலர் ஆத்மீக தமிழ் நறுமணம் வீச வாழ்த்துகின்றேன்.

அன்பன்

க. ரங்கநாதன்.

க. ரங்கநாதன்
தலைவர்
உயர்வாசற்குன்று முருகன் கோயில்
அறங்காவலர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவயோகம்
SIVAYOGAM
(Charity Reg. No. 1050398 Since 1995)
Founder & Spiritual Leader
Sakthy Ammechach Chudaroli
Mr Nagendram Seevaratnam, ACA, ACMA
Arulmihu London Muththumari Amman Temple
180-186 Upper Tooting Road, Tooting, London SW17 7EJ
Tel: 020 8767 9881 Fax: 020 8711 5333
Email: sivayogam1050398@yahoo.co.uk Web: www.sivayogam.org



# வாழ்த்துச் செய்தி

## வேதாகம விற்பன்னர் சிவஸ்ரீ பிச்சை சிவாச்சாரியரின் இருகண்கள்

வேத – மந்திர பாராயணங்களினால் நாட்டில் பல செல்வங்கள் மக்களுக்குக் கிட்டுகிறதென்றால் அதன் பெருமைக்குரியவர்களாக விளங்குபவர்களில் சர்வ சாதக விற்பன்னராக விளங்கும் பிள்ளைார்பட்டி அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயில் தலைமைக் குருக்கள் சிவஸ்ரீ பிச்சை சிவாச்சாரியார் அவர்கள் ஒருவராவார்.

சிவஸ்ரீ பிச்சை சிவாச்சாரியார் அவர்கள் வேதம், மந்திரம், சிவாகமம், சாஸ்திரம், சைவ சித்தாந்தம் உட்பட சைவ சமய தத்துவார்த்தங்களில் பாண்டித்தியம் பெற்ற ஒரு பெருந்தகை. வேத – மந்திர வித்தகரான இவர் யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதற்கமைய தமது அறிவைத் தானம் செய்யும் ஒரு பெரியாராக மலர்ந்திருப்பது சைவ சமயத்தவர்களுக்குக் கிடைத்த பெரும் பேறாகும்.

சமயம் நலிவுற்ற காலங்களில் எமது நாயன்மார்கள் தோன்றி எவ்வாறு வாதிட்டு எமது சமயத்தைக் காப்பாற்றினார்களோ அதேபோன்ற சிறு கட்டங்களை இன்று நாங்கள் எதிர்நோக்க வேண்டி உள்ளோம். இப்படியான ஒரு காலகட்டத்தில் வேத மந்திரங்களை, அவைகளின் புனிதங்களுக்கமைய, பாராயணம் செய்ய வைக்கும் பெரும் கைங்கரியத்தைப் பிச்சை சிவாச்சாரியார் மேற்கொண்டிருப்பது பாராட்டிற்குரியது. வேத பாடசாலைகளை அமைத்து நாட்டிலுள்ள சிறுவர்கள் மத்தியில் வேதத்தின் மகிமையை எடுத்து விளக்கி, அவர்களை அதன்பால் அக்கறைக் கொள்ளச் செய்து, வேதம் வளர்க்கும் அவரது தன்னலமற்ற தொண்டு மதிப்பீடு செய்யமுடியாததொன்று.

கடல்கடந்த நாடுகளில் வாழும் சைவ சமயத்தவர்களும் இன்று பிச்சை சிவாச்சாரியார் அவர்களின் சேவையைப் பாராட்டி மதிப்பளிக்கிறார்கள். வேத பாடசாலையில் சிவாச்சாரியார் அவர்களிடம் பயிற்சிபெற்றவர்கள் சமயாசார முறைப்படி குருப் பட்டம் தரித்து பெரிய பிரித்தானியா, அமெரிக்கா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் உள்ள கோயில்களில் அர்ச்சகர்களாகப் பணிபுரிகிறார்கள். இவர்கள் ஒழுக்கலர்களாக. இருப்பதையும் காணக்கூடியமாக இருக்கிறது.

தமிழ்நாடு, இலங்கை, இலண்டன் போன்ற நாடுகளில் குடமுழுக்கு விழாக்கள் பழம்பெரும் சம்பிரதாயச் சடங்குகளுடனும் சமய அனுட்டானங்களுடனும் நடைபெற சிவஸ்ரீ பிச்சைச் சிவாச்சாரியார் ஆற்றும் பணி தன்னிகரற்றதாகும்.

ஆன்மீகப் பணிகளுடன் நின்றுவிடாது பாடசாலை, வைத்தியசாலை, போன்ற பொது நிறுவனங்களை அமைப்பதற்கும், பிள்ளையார்பட்டி எனும் கிராமத்தை நகரமாக மாற்றுவதற்கும் ஓர் ஆணிவேராக இருந்து சமூகப் பணியிலும். தன்னை ஈடுபடுத்தியமை போற்றுதற்குரிதொன்று.

நமது சமயத்திற்கும், சமயச் சடங்குகளுக்கும், வேத வளர்ச்சிக்கும், வேத விற்பன்னர்களை உருவாக்குவதற்கும், புனிதமாக குடமுழுக்கு விழாக்களை நடாத்திவைத்தல் போன்ற ஆன்மீகப் பணியையும், சமூகப் பணியையும் தனது இரு கண்களாகக் கருதி தம்மை அர்ப்பணித்துள்ள சிவஸ்ரீ பிச்சை சிவாச்சாரியார் அவர்களின் அறுபதாவது அகவை நிறைவில் அவரை வேதமந்திர விற்பன்னர் வேதமந்திரம் போல் என்றும் வாழ்க என எனது வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கிறேன்.


என்றும் தங்கள் பணியைப் பாராட்டி, மதிப்பளித்து, மகிழும்

நாசீவரத்தினம் 06/08/2008

நாகேந்திரம் சீவரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# A BRIEF BIOGRAPHY OF SIVASHRI K. PITCHAI SIVAACHARYA

(Chief Priest of Pillayarpatti Karpaga Vinayaga Temple)

## BRIEF PROFILE:

Sivashri. K. PITCHAI SIVAACHARYA

## POSTAL ADDRESS:


Chief Priest

Arulmigu Karpaga Vinayagar Temple
Founder – Siva Neri Kazhagam
Pillaryarpatti – 630 207
Sivaganga District
Tamilnadu, India.
Tel : 04577-264275
Fax : 04565-264675
Email : pitchaianna@gmail.com
Website : www.pitchaianna.com


## EDUCATION:

School Final at Kundrakudi Adigalar High School and Mastered Sivaagamam, Yajur Veda, Sastras and Saiva Sidhantha.

## PROFESSION:

More than 40 years of service as a Priest and Chief Priest at Pillayarpatti Arulmigu Karpaga Vinayaga Temple.

## RELIGIOUS SERVICES:

1. Created "Shri Karpaga Vinayaga Veda Agama Vidhyalaya" during 1980 with the support of the Nagarathar Community.
2. Founded the 'Archaka Training Centre' and 'Siva Neri Kazhagam' with the following service oriented objectives in mind,
   a) To create religious faith.
   b) To publish Saiva Sidhantha books.
   c) To offer diplomas after four years of training.
   d) To organize conferences on Veda, Agama & Thirumurai recitations.
3. To identify, create and train soulful prayer offering Priests for the temples in India. (Such trained Priests are also serving the Hindu Temples in most of the foreign countries like USA, UK, Canada, France, South Africa, Malaysia, Singapore, Srilanka, Mauritius, Australia, Germany and Switzerland.
4. The Veda, Sivaagama and Thirumurai Scholar from USA, Shri. Hariharan has been sponsoring food and maintenance scholarships to 40 students of Siva Neri Kazhagam, since 12-12-1991 and thus the services are being furthered.
5. Using the personal honorariums and students' honorariums received for the functions and pujas conducted outside, a beautiful building of 4000 square feet has been constructed. This


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

building has been named after the parents of Shri. Hariharan as " Visalakshi Neelakandan Hall" in memory of Brahmashri Neelakanta Iyer and Smt. Visalakshi Ammal

6. The Visalakshi Neelakantan Charity has been offering increased support since 2006 and hence the students are made to concentrate more on studies and avoid attending functions and pujas outside.

SOCIAL SERVICES:

1. Organizing Free Medical Camps.
2. Establishing Schools for the rural poor children's educational up-liftment.
3. Offering scholarships to the needy and poor school children.
4. Regularizing and augmenting of Parent – Teachers Associations in Schools.
5. Helping the development of literature in Tamil and other Indian languages.
6. Rendering Transport help to the needy rural poor women to reach maternity hospitals.
7. Constructed an annexe building at a cost of Rs.6,50,000/- at the Hospital in Maruthangudi to the benefit of villagers.
8. Donated Rupees One Lakh to the Cancer Centre of Erode Imayam Charities.
9. Acquired Patta Lands and distributed them free of cost to the under privileged and poor workers of Pillayarpatti Temple.
10. Teaching "Vedgama" with free boarding and lodging facilities to the disciples.
11. Teaching computer and Yoga to the students.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. Serving as the Secretary of Shri Karpaga Vinayaga Elementary School.

## TEMPLE KUMBHABISHEKA (KUMBH SANCTIFICATION) PROGRAMMES:

He has headed and conducted "Kumbhabishekas" at more than 2,700 temples starting from Rameswaram to Kasi.

An indicative List of Kumbhabishekas conducted so far are as below;

- Three times (1972, 1985 & 1997) at Kasi Visalakshi Temple in Kasi.
- Two times at the Panchvati Kasi Nagareswar Temple at Nashik in Maharastra.
- Three times at Pillayarpatti Temple.
- Palani Hill Temple & Palani Thiru Avinankudi Temple (2000), Swamimalai (2001), Rameswaram (2001), Thiruvaroor (2001), Tiruvannamalai (2002), Ratnagiri (2002) and Thirupperundurai for two times.




- Also at various temples in Kerala, Karnataka, Uttarpradesh, Rajasthan and Andhrapradesh.
- Kumbhabishekas abroad at Singapore tank road Shri Dhandayudhapani and nine other temples.
- Numerous temples in Malaysia, London, Toronto, Montreal, Mauritius, Australia, Germany, France and Srilanka.

## THIRUKUDAMUZHUKKU FUNCTIONS:

Conducted Thirukkudamuzhukku functions at Madurai Shri Meenakshi Chokkanathar Temple, Tirunelveli Shri Gandhimathi Nellaiyappar Temple, Thirupparamkundram Shri Subramanya Temple, Chennai Mylapore Shri Kapaleeswarar Temple, Bangalooru (Karnataka) Shri Raja Rajeswari Temple and various other village temples in Tamilnadu.

## BOOKS PUBLISHED:

1. Sivaagama Prayoga Mala (Part 1, 2 & 3) from Krantham for trainers.
2. English translation version of Tamil scholar Dr. S. Gangadharan's "Sivaagnanabodham".
3. "Sivadheeksha Prayogamala" and short texts published during the Silver Jubilee of Patta sale.

## PARTICIPATION IN CONFERENCES AND RELIGIOUS ARTICLES AT SEMINARS:

- Organized "Mei Kandar Vizha" in association with Thiruvannamalai


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aadheenam to appreciate Saivagama Experts.

- Organized a three day research conference on "Temple Arts" in association with the Alagappa University, Karaikudi.
- Presented more than a hundred religious articles at the National Level Conferences and Seminars.
- Presented a three day discourse on religious topics along with Mayiladuthurai Ravi Sivaacharya, Kanchipuram Rajappa Sivaacharya and Chithoor Gnanasambandha Sivaacharya.
- Organized "Balakari Shri Ramanathan Chettiar's Sivaagnana Botha Discourse and Prof. P. Namasivayam's Periya Puranam discourse and Shri. K. Sundaramoorthy's 'Saiva Sidhantha' discourse.
- Organized a three day workshop and conference on "Vedas, Agamas, Purana, Thirumurai, Sculpture, Nadaswaram and Tavil in association with Koviloor Andavan Swamy Mutt.
- Organized a five day discourse on "Kural and Geetha" by Theni Vedapuri Shri Omkarananda Swamy in association with Karaikudi Hindu Mahabhiman Sangh.
- Offered "Sivadheeksha" to thousands of disciples at Pattmangalem, Koviloor, Thiruperundurai, Kundrakudi, Thirupparam kundram and Pillayarpatti.
- Served as a member of Advisory committee of Hindu Religious and Endowment Charities Ministry of Government of Tamilnadu.
- Offered Lectures at All India Radio and in Televisions at Singapore, Canada and London.



- Participated in the Live Quiz programme of "London Dheepam" Television Channel.

AWARDS AND TITLES RECEIVED:

- "Siva Neri Chemmal" title offered by Kundrakudi Thiruvannamalai Aadheenem in 1985.
- Honorary Doctorate (Honoris Cansa) offered by the Sanskrit University in 1986.
- "Sivaagama Prathista Bhushan" at the Sivaagama Vidvat Sabha in 1990 at Ratnagiri.
- "Piravaa Pemman Peruneri Chelvar" offered at Kundrakudi Maha Ganesan Temple Thirukkuda Muzhukku in 1992.
- "Sivaagama Chemmal" awarded by Coimbatore Gowmara Mutt in 1994.
- "Arut Pani Chemmal" award offered by Ponnamaravadhi Thiyaga Brahma Sabha in 1997.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- "Kovil Pani Chemmal" title offered at the "Conference on Temple Arts" in 1998 organized by Alagappa University and Kundrakudi Thiruvannamalai Aadheenam.
- "Vikas Ratna" Award bestowed by the India International Friendship Society at New Delhi in 1998.
- "Sivaagama Prathista Saagaram" title by the Hindu Iyyappa Temple at Toronto City in Canada.
- "Sivaacharya Chakravarthy" award by Shri Varasidhdhi Vinayaga temple in Canada.
- Hindu Renaissance Award by the Hinduism Today daily from Hawaii Islands USA in 2004.
- "Sivaagamath Thiruthondar" award in 2005 by the Thiruvaddhuthurai Aadheenam.

## SPECIAL APPRECIATIONS:

- Special Appreciations and felicitations were offered by Thirumuruga Kirupananda Varriyar, Karaikudi Rotary Club, Aadheenams of various mutts, temples at various countries like UK, Canada, Australia and France.
- Special Prayers were offered at Indian born Multinational Businessman of UK, Shri Lakshmi Mittal's residence in London.
- Has the love, affection and appreciation of various Judges, Ministers, Businessmen, Lawyers, Collectors, Doctors, Tamil Scholars and religious leaders.

## BIO-DATA:

| | | |
|---|---|---|
| Native Place | : | Nagamukundankudi near Ilayankudi |
| Born on | : | Saravadhari Avani Visakam |
| Father | : | Shri. Krishna Kurukkal |
| Mother | : | Smt. K. Muthu Ammal |
| Wife | : | Smt. P. Saroja |
| Son | : | Shri. P. Sridhar, M.A.,<br>Archaker, Shri Karpaga Vinayagar Temple, Pillayarpatti |
| Daughter in Law | : | Smt. Shri Vidhya |
| Grand Daughters | : | Karpagapriya – Guhapriya |
| Elder Daughter | : | Smt. Sudha, M.Com., |
| Son in Law | : | Mr. Ganesh, Priest at Sri Murugan Temple, London |
| Grand Daughter | : | Nithya shri |
| Grand Sons | : | Karpaga Ram – Karthik Ram |
| Younger Daughter | : | Smt. Karpagam, M.Sc., |
| Son in Law | : | Shri. Sankar, Priest, Shri Muthumariamman Temple, London |
| Grand Daughters | : | Abarna |

And blessed to have more than 2500 students.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருகுலம் காக்கும் குருநாதர்

ச. சிறீரங்கன்

காரைக்குடி மாவட்டத்திலுள்ள வயிரவப்பட்டி ஆலயப் பிரார்த்தனையை நிறைவு செய்துவிட்டு அதே மாவட்டத்திலுள்ள பிள்ளையார் பட்டியில் காலை வேலையில் சென்றடைகின்றோம். பெரிய பரப்பளவில் வியாபித்திருக்கும் பிள்ளையார்பட்டி ஆலயக் கோபுரத்தை தரிசித்துவிட்டு, உள்ளே நுழைகின்றோம். ஒரு சாதாரண நாளில் அங்கே குழுமியுள்ள அடியார் கூட்டத்தை நோக்கிவிட்டு, மூலாதரா மோனப்பொருள் கணபதியை வணங்குகின்றோம். அந்த ஆலயத்தின் பெரிய குருவான பிச்சைக்குருக்கள் மிக அமைதியாகப் பூசை செய்து கொண்டிருந்தார். அடியார்கள் அறுகம்புல்லினால் ஆன மாலையைக் கொடுத்து காணிக்கையை பூர்த்தி செய்து கொண்டிருந்தனர். விரைந்து சென்று நாங்களும் பெரிய அறுகம்புல் மாலையை வாங்கி வந்து ஐயாவிடம் கையளித்து வழிபாடு செய்கின்றோம். தீபாராதனை வழிபாட்டை முடித்துக் கொண்டபோது பிச்சை ஐயா எங்களை நோக்கி வந்தார். இலண்டனில் அவரைப் பார்த்த மாதிரியே மிகவும் அமைதியாக அதே வேளை எளிமையாகவும் காணப்பட்டார். அந்தக் காலைவேலையில் அவருடன் உரையாடுவது கூட, மனதுக்கு மிக இதமாக இருந்தது.

உயர்ந்த உருவம், வெண் தலைமுடி, வெண்ணீற்றுப்பூச்சு, பளபளக்கும் முத்துப் பற்கள் இவை அவரை வசீகரப்படுத்தும் அணிகலன் களாகும். அவர் எம்முடன் உரையாடும்போதுங்கூட சிற்சில பக்தர்கள் அவரை அணுகிக் குறுக்கீடு செய்கின்றனர். அவர்கள் எல்லோருக்கும் அதே அமைதியுடன் பதில் கூறி, அனுப்பிவிட்டு, ஆலய உட்பிரகாரத்தை அழைத்துச் சென்று காட்டுகிறார்.


சீதக்களபச் செந்தாமரைப் பூம்பாதச் சிலம்பைக் கொண்ட பிள்ளையார் பெருமானை மனம் நிறைவாக வணங்கிக் கொண்டோம். வழிபாடு முடிவடைந்ததும் பிச்சைக்குருக்கள் எங்களை அழைத்துச் சென்று குருகுலம் பாடசாலையைக் காண்பிக்கின்றார்.

வேதமந்திர, ஆகமங்களைப் பயில்கின்ற அந்தணப் பிள்ளைகள் அணிவகுத்து அமர்ந்திருக் கின்றனர். எல்லோரும் ஒன்றிணைந்து கீதம் இசைக்கின்றனர். சுமார் 30 வரையிலான பிள்ளைகள். ''இவர்கள் மேற்பிரிவு படிப்பவர்கள்...'' என்று அவர்களை அறிமுகம் செய்துவைத்த ஐயா, ''உங்கள் பெயர்களையும், ஊர்களையும் கூறுங்கள்...''. என்றதும் அவர்கள் தங்களை அறிமுகம் செய்ய ஆரம்பிக்கின்றனர்.

''எனது ஊர் யாழ்ப்பாணம் நல்லூர்'' என்று கூறிய இளைஞர் தனது பெயரையும் கூறுகின்றார்.

''எனது ஊர் யாழ்ப்பாணம்...'' என்கின்றார் இன்னொருவர்.

இவ்வாறு ஒவ்வொருவராக தத்தம் பெயர்களையும், ஊர்களையும் கூறுகின்றனர்.



தமிழ்நாட்டுப்பிள்ளைகளுடன் புலம் பெயர்ந்த பிள்ளைகளும் தங்கள் விவரங்களைக் கூறி அமர்கின்றனர். ஒவ்வொருத்தராக அவர்களைப் பெயர் கூறி அழைத்த ஐயா, ஒவ்வொரு சுலோகங்களைக் கூறிக் காட்டுமாறு பணிக்கின்றார். தங்குதடையின்றி, மடை திறந்த வெள்ளமாக சுலோகங்கள் ஒவ்வொரு பிள்ளைகளாலும் கூறப்படுகின்றன. குருகுலத்தை அழியவிடாது வேதமந்திரங்களைச் சிதையவிடாது பேணிப் பாதுகாக்கும் பிச்சைக்குருக்கள் ஐயா, ஆலயக் கொடித்தம்பம்போல் உயர்ந்து நிற்கிறார். அதுவும் கதியின்றி நாதியின்றி தமிழ்நாடு புகுந்துள்ள எம்மவர்களையும் அணைத்து வழிநடத்தும் ஐயாவின் பணி இமயத்தைவிட உயர்ந்து நிற்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசையாகி, ஒளியாகி நிறைந்துள்ள பரம்பொருளின் அருட்கடாட்சம் அக்குருகுலத்தே நிலவுகின்ற தென்றால் அது மிகையல்ல.

பிச்சைக்குருக்களின் இந்த மகத்தான பணி ஏனைய மத குருமார்களுக்கும் ஓர் முன்னு தாரணமாக விளங்குகின்றது.

''அந்தணன் ஆவதும் காட்டி வந்தாண்டாய்'' என்று கூறிய மணிவாசகப் பெருமானின் கூற்றுக் கிணங்க இறைவனையும், இறை தூதுவர்களையும் ஒருங்கிணைத்து வருகின்ற பிச்சைக்குருக்கள் சிவாச்சாரியாரின் தொண்டினை துல்லியமாக எடுத்தியம்ப வார்த்தைகளே இல்லை. ''எழுத்தறி வித்தவன் இறைவன்'' என்ற வாக்கிற்கிணங்க தனது உடல் பொருள் அத்தனையையும் தியாகம் செய்கின்ற அந்த உத்தமரை பாரி வள்ளல் என்பதா அல்லது வாரிக் கொடுத்த கர்ணன் என்பதா? தெரியவில்லை.

பிள்ளைகளைத் தொடர்ந்து பாடங்களைப் படிக்குமாறு கேட்டுக் கொண்ட ஐயா அவர்கள், எம்மை அழைத்துச் சென்று குருகுலத்தில் பிள்ளைகள் தங்கும் விடுதி, சமையலறைக் கூடம் என்பனவற்றை எமக்கு சுற்றிக் காண்பிக்கின்றார்.

முடிவில் ஐயா அவர்கள் கூறிய வார்த்தைகள் எம்மை திடுக்கிட வைக்கின்றன.

''இந்த குருகுலத்தை நடாத்துவதற்கு யாரிடம் இருந்தும் பணத்தை உதவியாகப் பெறுவதும் இல்லை. அதனை எதிர்பார்ப்பதும் இல்லை'' என்று பிச்சைக்குருக்கள் ஐயா கூறிய போது அந்த அதிசயப் பிறவியை மலர் தூவி அர்ச்சிக்க வேண்டும்போல்பட்டது.

பணமென்றால் பிணமும் வாய்திறக்கும் நிலையில் இப்படி ஒருவரா? நம்பமுடியவில்லை.

தமிழ்நாடு அரசு இவருக்கு வழங்கியுள்ள கலாநிதிப் பட்டம் போதாது. அதைவிட உயர்பட்டம் ஒன்றினை தேடிப்பிடித்து இவருக்கு வழங்கியிருக்க வேண்டும்.

குருகுலம் தழைக்க வைக்கும் குருநாதர் பல்லாண்டு, பல்லாண்டு வாழ்க! வாழ்கவே!











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா காணுகின்றார் பிள்ளையார்பட்டி

# சிவஸ்ரீ பிச்சை சிவாச்சாரியார்



உலகின் உயர்வையே தம் வாழ்வின் நோக்கமாகக் கொண்டது எமது அந்தண குலம். வருணங்களுக்கு தலைமை கொண்டதாய், வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு, சிவத்தன்மை கொண்டு ''லோகா சமஸ்தா சுகினோ பவந்து'' என உலகின் நலத்திற்காய் ஒவ்வொரு நாளும் இறைவனை தொழுது எவ்வுயிர்க்கும் செந்தன்மை பூண்டு, பிறப்பொழுக்கம் பேணி, அந்தத்தை அவாவி, பிரம்பத்தை நாடி, அறத்தை விரும்பி நிற்கின்ற இயல்புகளால் அந்தணர் ''பிராமணர்'' என ஓதுப் பெயர் கொண்டனர். ஆறுமுகப்பெருமானின் ஒருமுகம் உலகின் நலம் காக்கும் அந்தணரின் வேள்வியேற்று நிற்பதாக திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் உரைப்பார். ''மந்திர விதியின் மரபுவழி வழாது அந்தணர் வேள்வி ஓர்க்குமே'' என்று துறவின் எல்லை தொட்ட ரிஷிகளின் வழித்தோன்றல்களாய் மிளிருகின்ற இந்த பிராமண குலத்திலே அவ்வப்போது அதிஉத்தம சிவாச்சாரியர்கள் குலத்திற்கே பெருமை தருகின்ற விதமாய் சாதனை புரிந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையில் பிள்ளையார்பட்டி என்றாலே ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயமும், பிச்சைக் குருக்களும், வேதசிவாகம பாடசாலையும் உடனே எல்லோர் மனதிலும் ஒருகணம் வந்து நிற்கும். அந்த அளவிற்கு சிறப்பும், பெருமிதமும் கொண்டவர் எங்களுடைய குருக்கள் ஐயா அவர்கள். நாம் எல்லோரும் ''பிச்சை அண்ணா'' என்றே அன்பாக அவரை அழைப்பதுண்டு. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட அந்தணச் சிறார்களுக்கு வேத, சிவாகம கல்வியை போதித்து வருகின்ற உத்தமர். வெறும் ஆன்மீகம் மட்டும் தன் தொண்டு என்று சிந்திக்காது சமூக நிறுவனங்களோடு சேர்ந்து சமூகப் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர். இலவசக்கல்வி, இலவச மருத்துவ வசதி, மகப்பேறு பெண்களுக்கு உதவி, மருத்துவமனை கட்டிட உதவி, புற்றுநோய் மைய உதவி, பிள்ளையார்பட்டி திருக்கோயில் ஏழ்மை பணியாளர்களுக்கு உதவி, மாணவர்களுக்கு கணணி,யோகா பயிற்சி எல்லாவற்றிற்கும் மேலாக வேத, சிவகாம கல்வி அறிவை இலவச உணவு தங்குமிட வசதியுடன் செயலாற்றி வரும் சிறப்பு என சிவஸ்ரீ பிச்சைக்குருக்கள் அவர்களின் பணி அற்புதமான ஆன்மீக, சமூக வேள்வியாக அமைகின்றது. இத்தனை சிறப்புகளுடன் எளிமையே உருவாக கருமை நிறமும், வெண்மைத் தாடியும், கழுத்தில் உருத்திராக்கமும், நெற்றியில் திருநீற்றுப் பூச்சும், வெள்ளை வேட்டி, வெள்ளை சால்வை சகிதமாக கருணைப் பார்வையோடு அமைதியே ஆளுமைக் கொள்ளுகின்ற உருவமாய் இருக்கின்ற அன்பிற்குரிய பிச்சை அண்ணா அறுபதாம் அகவை என்னும் ''ஷஷ்டியப்த பூர்த்தி'' விழா காணுகின்ற நன்னாள் எங்கள் அனைவருக்கும் மகிழ்வு தருவதாய் அமையும் விடயமாகின்றது.

இந்த இனிய மனிதருக்கு மணி விழா என்றால் அந்தப் பிள்ளையார்பட்டியே குதூகல தேவலோகமாக காட்சி தரும் என்றால் அது மிகையல்ல. எப்போதுமே ஆடம்பரங்களையும், ஆபரணங்களையும் விரும்பாத இந்த இனியவரை இந்த சந்தர்ப்பத்திலே அழகுப் படுத்திப் பார்ப்பது, நம் அனைவரின் கடமையாகின்றது. இந்த நிகழ்விற்காக இலங்கை, மலேசியா, கனடா, இலண்டன், அமெரிக்கா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா போன்ற உலக நாடுகளிலிருந்து சிவாச்சாரியார்களும், மற்றும் இவரின் மாணவ குருமாரும் கலந்தும் வாழ்த்துக்கூறியும் ஆசி வேண்டியும் பங்குகொண்டு சிறப்பிக்கின்றனர். ''விசாகத்தில் பிறந்தோர் அசாத்திய ஆளுமை உடையவர்'' என்பது ஜோதிட வாக்கு. சகலரையும் தம் வசம் திரும்பிப் பார்க்க வைக்கின்ற சக்தி இந்த விசாக நட்சத்திரத்திற்கு உண்டு. அதை நிரூபித்து வாழ்வில் வெற்றி கண்டு நிற்கின்றார் சிவஸ்ரீ பிச்சை சிவாச்சாரியார். எழுநூறுக்கும் மேற்பட்ட மஹா கும்பாபிஷேகங்களை இந்தியா இலங்கை உட்பட உலக நாடுகள் எங்கும் தலைமை வகித்து நடாத்திய பெருமைக்குரியவர். சமஸ்கிருத பல்கலைக்கழகம் 1986ஆம் ஆண்டு ''கௌரவ டாக்டர்'' பட்டம் வழங்கி கௌரவித்தது. பல சமூக அமைப்புகளினாலும் எண்ணிலடங்காத பட்டங்களும் கௌரவ விருதுகளும் பெற்ற பெருமைக்கு உரியவர் செப்டம்பர் 5ம் 6ம் திகதிகளில் நடைபெறுகின்ற ஷஷ்டியப்த பூர்த்தி விழாவில் அறுபதாம் கல்யாண வைபவமாக அவரது துணைவியார் ஸ்ரீமதி சரோஜம்பாள் அவர்களுக்கு மாங்கல்ய மங்கல நாண் பூட்டி திருமாங்கல்ய தாரணம் செய்து மக்கள் மருமக்கள் பேரர் சூழ பெரியோரிடம் ஆசி பெற்று சிறியோரை ஆசீர்வதிக்கின்றார். இந்த அற்புத விழா இனிது நடைபெற, நாமும் மனமுவந்து அன்னை பராசக்தியை பிரார்த்திக்கின்றோம்.

அன்புடன்: தன்னையர்.
கலாநிதி ராம். தேவலோகேஸ்வரக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறம் பல புரியும் அந்தணர்



அடிக்கடி தமிழ்நாட்டுத் தலங்களுக்குச் சென்றுவரும் என் நண்பர் ஒருவரை அண்மையிற் சந்தித்தேன். தான் பிள்ளையார்பட்டியிலுள்ள கோயிலுக்குப் போன செய்தியைச் சொன்னார். அங்கு அர்ச்சனை செய்தபின் தன்னை அழைத்துச் சென்று கோயிலைக் காட்டிய வேதபாடசாலை மாணவருக்கு மனமுவந்து பணம் கொடுத்தபோது அவர் வாங்க மறுத்துவிட்ட தாகவும் சொன்னார். வாங்க மறுத்ததற்குக் காரணத்தைத் தாம் கேட்டபோது, அந்த மாணவர், தமது சட்டதிட்டம் அப்படி, யாரிடமும் பணம் வாங்க அநுமதியில்லை, நாங்கள் அதை எப்பொழுதும் கடைப்பிடிக்கிறோம் என்று முகமலர்வுடன் சொன்னாராம். அந்த மாணவர் கூறிய நாணயமான அந்த வேதபாடசாலையை நடத்துபவர்தான் இப்போது மணிவிழாக் காணும் சிவஸ்ரீ பிச்சைக் குருக்கள் அவர்கள்.

நெடிய தோற்றமும் நெற்றி நிறைந்த விபூதியும் கழுத்திலே உருத்திராக்கமும் அணிந்த பொலிவான தோற்றத்துக்கு உரியவர் சிவஸ்ரீ பிச்சைக் குருக்கள் அவர்கள். நாகமுகுந்தன்குடி என்ற ஊரிலே சிவஸ்ரீ கிருஷ்ணக் குருக்கள் அவர்களுக்கும் முத்து அம்மாள் அவர்களுக்கும் புத்திரராய்ப் பிறந்த குருக்கள் அவர்கள் கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக சைவத்துக்கு சேவைசெய்து வருகிறார் எனும்போது பிரமிப்பு ஏற்படுகிறது.

உலகின் பல நாடுகளுக்கும் சென்று கோயில் கும்பாபிஷேகம் செய்துவைத்துள்ள குருக்கள் அவர்கள் பிள்ளையார்பட்டியிலே சிவாசாரியர்களைப் பயிற்றுவிக்கும் வேதபாட சாலையை நடத்தி வருகிறார். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்து வந்து இங்கே பலர் வேதத்தைப் பயின்று பூஜை முறைகளைக் கற்று வருகிறார்கள். இந்தப் பாடசாலையிலே படித்த பலர் சிவாசாரியர்களாக குருக்களின் பெயர் சொல்லுமளவுக்கு வெளிநாடுகளில் பல கோயில்களிலே சேவை செய்துவருகிறார்கள். லண்டனில் மட்டும் பத்துக்கும் மேற்பட்ட சிவாசாரியப் பெருமக்கள் இருக்கிறார்கள்.

சமய சிந்தனையோடு மட்டும் அமைந்து விடாது குருக்கள் அவர்கள் சமூகசிந்தனையும் கொண்டு வாழ்கிறார். மருத்துவ வசதியும் கல்வி வசதியும் ஏற்படுத்தி இளம் சிறுவர்கள் நல்ல நெறியுடன் வாழ, வளர வழிசமைத்துள்ளார் இவர். ஏழை மாணவர் கல்வி பெற இந்த நற்பணி உதவுகிறது.

> 'அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டொழுக லான்'

என்பது வள்ளுவர் வாக்கு. குருக்கள் அவர்கள மற்றையவர்களுக்கு உதவும் நோக்கிலே பல அறச் சேவைகளைச் செய்து வருகிறார். அவர் ஒரு அந்தணரே!

இத்தகைய சிறப்புக்கள் பல உள்ள ஒரு சிவாசாரியர் மணிவிழாக் காண்பது நமக்கு மகிழ்வைத் தருகிறது. குருக்கள் மேலும் பல்லாண்டு தமது மனைவி திருமதி சரோஜா அம்மையாரோடும் மக்கள், பேரக் குழந்தைகளோடும் வாழ்ந்து சைவத்துக்கும் தெய்வத்துக்கும் தொண்டு செய்யவேண்டும் என்பது என்போன்ற சைவமக்களின் பேரவா. அது நிறைவு பெற எல்லாம் வல்ல கற்பகவிநாயகர் குருக்களுக்கும் அவரின் குடும்பத்துக்கும் எல்லா நலன்களையும் வழங்கவேண்டும் என்று விநாயகரைப் பிரார்த்திக்கிறோம்.

க. ஜெகதீசுவரன்
ஆசிரியர் - கலசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி கர்வம்

ஒரு மனிதனுக்கு மூன்று விதங்களில் கர்வம் உண்டாவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அவைதாம் பணம் – பதவி – புகழ்.

பணம் அதிகமாக வந்தாலும் கர்வம் வரலாம். பெரிய பதவி கிடைத்தாலும் கர்வம் வரலாம். புகழ் அதிகமாக போனாலும் கர்வம் வரலாம்.

இந்த மூன்று வகையான கர்வத்திற்கும் இடம் கொடுக்காமல் இருக்கிறார்கள் பாருங்கள்... அவர்கள் தாம் சிறந்த மனிதர்கள்.

ஒரு பெரிய பொறுப்பிலே இருப்பவர்களுக்கு கர்வம் வந்துவிடக்கூடாது. அப்படி வந்தால் அது எல்லோருக்கும் இடைஞ்சல் அடையும்.

ஒரு ராஜா இருந்தார். அவர் ஒரு நாள் தன் தலைநகரைச் சுற்றி வந்து கொண்டிருந்தார். அப்போது அவர் ஓரிடத்தில் ஓர் அழகான நிலத்தைப் பார்த்தார். ஆஹா! இந்த இடத்தில் நமக்கென்று ஒரு மாளிகை கட்டினால் எவ்வளவு நன்றாகயிருக்கும் என்று நினைத்தார்.

உடனே அவர் அந்த நிலம் யாருக்குச் சொந்தம் என்று விசாரிக்கச் சொன்னார். அந்த இடம் ஒரு வயதான கிழவிக்குச் சொந்தமாம்! அந்த அம்மாதான் அதில் ஒரு குடிசையைப் போட்டு குடியிருந்து கொண்டிருக்கிறார்கள் என்ற தகவல் அரசருக்குத் தெரிவிக்கப்பட்டது.

சரி... அந்த நிலத்திற்கு ஒரு விலையை நிர்ணயம் செய்து அந்த விலையை கிழவியிடம் கொடுங்கள் என்று அரசர் உத்தரவிட்டார். ஆனால் அம்மூதாட்டி இது எங்கள் பூர்வீக இடம் இதை விற்கமாட்டேன். என்று சொல்லிவிட்டாள். சரி... இரண்டு பங்கு விலை கொடுக்கிறோம்! என்று அரண்டனை ஆட்கள் கூறினார்கள்.

பாட்டி அதற்கும் சம்மதிக்கவில்லை. இதைக் கேள்விப்பட்டதும் அரசருக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் ஆட்களைக் கூப்பிட்டு, உடனே போய் அந்தக் குடிசையைப் பிரித்து எரியுங்கள்! என்று கோபமாகக் கத்தினார். குடிசை பிரித்து எறிந்து இடிக்கப்பட்டது. அந்த வயதான மூதாட்டியை அந்த இடத்தை விட்டே துரத்திவிட்டார்கள். அவ்விடத்தில் அரசரின் விருப்பப்படியே ஒரு மாளிகையைக் கட்டினார்கள்.

அம்மூதாட்டிப் பாவம்... அரசரே இப்படிச் செய்தால் யாரிடம் போய் முறையிட முடியும்? ஒரு ஞானியிடம் சென்று அம்மூதாட்டி தனக்கு நேர்ந்த கஷ்டத்தைத் தெரிவித்தாள். ஞானி மூதாட்டி கூறியதை மனத்தில்வைத்துக் கொண்டார்.

ஒருநாள் அரசரே இந்த ஞானி இருந்த இடத்துக்கு வந்து, சுவாமி! நான் புதிதாக ஒரு மாளிகை கட்டியிருக்கிறேன். தாங்கள் அதை ஒருமுறை வந்து பார்க்க வேண்டும்! என்று பணிவுடன் வணங்கிக் கேட்டுக் கொண்டார். ஞானியும் அதற்கு சம்மதித்தார்.

ஒருநாள் அரசரின் அழைப்பிற்கிணங்க ஞானி அந்த மாளிகைக்குச் சென்றார். ஆனால் அவர் சும்மா போகவில்லை. ஒரு கழுதையையும் ஓட்டிக் கொண்டு போனார். அதோடு சில கோணிப் பைகளையும் தன்னுடன் எடுத்துச் சென்றார். இவற்றையெல்லாம் பார்த்த அரசர், இது என்ன? மாளிகைக்கு வாருங்கள் என்று அழைத்தால், இவர் கழுதையோடும் சாக்குப் பைகளுடனும் வருகிறாரே! என எண்ணி ஆச்சரியப் பட்டார். எனவே, அவர் ஞானியிடம், எதற்காக இதெல்லாம்? என்று வினவினார்.

இந்த உங்களுடைய அரச தோட்டத்திலிருந்து கொஞ்சம் மண் எடுத்துப் போகலாம் என்று நினைக்கிறேன். அதற்குத் தாங்கள் அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் ஞானி. அதைக் கேட்ட அரசர், இது என்ன வேடிக்கையான வேண்டுகோளாக அல்லவா இருக்கிறது! என்று எண்ணினார். இருந்தாலும், கொஞ்சம் மண் தானே கேட்கிறார் — எடுத்து கொண்டு போகட்டும் என்று நினைத்து சரி! என்று அனுமதியும் தந்தார்.

அந்த ஞானி தோட்டத்திற்குச் சென்று, மண்ணை வெட்டி, கோணிப்பைகளில் நிரப்பினார். பிறகு அவர் அரசரைப் பார்த்து, கொஞ்சம் இங்கே வந்து, இந்த மண் மூட்டையை தூக்கி கழுதையின் முதுகில் வைக்க உதவுங்கள் என்று சொல்லி அழைத்தார்.

அரசரும் அதற்கு ஒப்புக் கொண்டு மண்மூட்டை இருந்த இடத்திற்குச் சென்று மண்மூட்டையைத் தூக்கிப் பார்த்தார். அவரால் தூக்க முடியவில்லை. திணறினார்.

அப்போது ஞானி, அரசே, இந்த ஒரு கோணி மூட்டை மண்ணையே உங்களால் தூக்க முடிய வில்லையே... அந்தக் கிழவியிடமிருந்து அநியாயமாக அபகரித்த இந்தத் தோட்டம் முழுவதையுமே சுமக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்களே...அது உங்களால் முடியுமா? என்று கேட்டார்.

அரசர் யோசித்தார். தன் செயலுக்காக வருந்தினார். மூதாட்டியை உடனே வரவழைத்தார். அந்த மூதாட்டியிடம், அம்மா, நான் தவறு செய்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். இன்று முதல் இந்த மாளிகையும் தோட்டமும் உங்களுக்குத் தான் சொந்தம்! என்று கூறினார்.

போகும்போது இந்த உலகத்திலிருந்து நாம் எதைக் கொண்டு போகப் போகிறோம்? ஆதலால் நாம் ரொம்பவும் அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை... பிகு செய்ய வேண்டியதில்லை... அடம் பிடிக்க வேண்டியதில்லை... கர்வப்பட வேண்டியதில்லை. ●

**தென்கச்சி சுவாமிநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலணி குடவாயிற் கோட்ட விஸ்வநாத சிவன் கோயில்

தக்ஷண கைலாசமென்னும் இலங்கையின் வடபகுதியில் சுன்னாகம் அமைந்துள்ளது. சுன்னாகத்தில் மயிலணி என்னும் ஓரிடத்தில் குடவாயிற் கோட்ட சிவன் அருள்பாலித்துக் கொண்டு இருக்கிறார். தக்ஷணகைலாயம் எப்படி வந்ததென்பது எல்லோருக்கும் தெரிந்தது. அதாவது மிகப் பழங்காலத்தில் ஒரு சமயம் ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்குமிடையில் யார் அதிகம் பலசாலி என்பதில் வாக்குவாதம் வந்தது. வாதிட்டனர். இறுதியில் யார் அதிக பலசாலி என்பதை அறிய ஒரு போட்டி நடந்தது. அதாவது மகாமேருமலைச் சிகரத்தை வாயுதேவன் பறித்து வீச வேண்டுமென்றும் அதை ஆதிகேசன் தடுக்க வேண்டும் என்றும். இப்போட்டியில் யார் வெற்றி பெறுகிறாரோ அவரே மிக்க பலசாலி ஆவாரென்றும் முடிவு செய்யப்பட்டது. இருவருக்குமிடையில் கடும் போட்டி நடந்து இறுதியில் ஆதிகேசன் தளர்வடைந்து தடுக்க முடியாமல் போக வாயுதேவன் மேரு சிகரத்தை வலிவோடு பறித்துத் தென் கடலில் வீசினான். எறியப்பட்ட சிகரம் தென்கடலில் அலங்கித் தோன்றியபடியால் தக்ஷண கைலாசமென்றும் பின் இலங்கை என்றும் அழைக்கப்படுகிறது. வீசப்பட்ட சிகரம் தெற்கே அடிப்பாகமும் வடக்கே முடிப் பாகமுமாக வீழ்ந்தது. இதை இலங்கையின் வரைபடம் மூலம் அறியலாம். தெய்வீகத் தன்மையும் சிறப்புத் தன்மையும் ஓர் மலையின் அடிப்பாகத்தைவிட முடிப்பாகத்தில் அதிகமாகும். இலங்கையின் முடிப்பகுதியாகிய வடபகுதியே மிகவும் தெய்வீகத்தன்மையோடு புனிதமாகவும் காணப்படுகிறது.

தக்ஷணகைலாசத்தின் மிக முக்கிய பகுதி சுன்னாகம் என்ற இடமாகும். (சுல் + நாகம் = சுன்னாகம், கல் என்பது வெள்ளி, நாகம் என்பது மலை) சுன்னாகத்துக்கு வேறு பெயர்கள் கயிலமலை, ரஜதகிரி, ரஜதாசலம் என்பன ஒரே கருத்துடைய பெயர்களாகும். சுன்னாகம் என்ற இடம் பழைய காலத்தில் சிறு குன்றாக அமைந்திருந்தது. சுப்பிரமணியப்பெருமாள் சூரசம்காரம் முடித்துத், தேவர் சிறை மீட்டு மயில் வாகனத்தில் ஆரோகணித்து வருகையில் சுன்னாகப்பதியைக் கண்ணுற்றதும் திருக்கைலையில் இறைவியுடன் எம்பெருமான் வீற்றிருக்கும் திருக்கோலம் மனதில் தோன்ற மயில் வாகனத்தினின்றும் இறங்கி அவ்விடத்தில் தேவநம்பியனைக் கொண்டு ஓர் ஆலயம் அமைத்து தந்தையின் சிவலிங்க வடிவத்தைத் தாபித்து சிவாகம முறைப்படி பூஜை செய்தருளினார். அசுரர்களைக் கொன்ற பாவம் சிவபூஜையால் நீங்கப் பெற்றது.

முருகப் பெருமானின் பூசையினால் மகிழ்ந்த சிவபெருமான் தனது ஆனந்த நடனக் காட்சியைக் காட்டினார். வீரவாகுத் தேவரும், இலக்கத்தெட்டு வீரர்களும், கணநாதரும், விஷ்ணு, பிரம்மா, இந்திரன் முதலாகிய தேவர்களும் இறைவனின் திருநடனக் காட்சியைக் கண்டு வணங்கி இறும்பூதெய்தி நின்றனர். அச்சமயத்தில் குமரப்பெருமானின் வாகனமான மயிலானது ஆனந்த மேலீட்டினால் தனது தோகையை விரித்தபடி சிவபெருமானையும், சிவகுமாரனையும் வலம் வந்து வணங்கி நின்றது. முருகப்பெருமான் மகிழ்ந்து மயிலை நோக்கி உன் பெயரால் இத்தலம் மயிலணி என வழங்குவதாக ஆசீர்வதித்தார். இக்காரணத்தால் இவ்விடம் இன்னும் மயிலணி என்றே வழங்கப்படுகிறது.

இத்திருத்தலத்தின் கருவறையில் சிவலிங்கப் பெருமானுடன் நடராஜமூர்த்தி, உமையம்மை யோடும் விநாயகர், சுப்பிரமணியர் ஆகியவர்களோடு ஒன்றாயமர்ந்து காட்சி கொடுக்கும் இத்திருத்தலம் இது ஒன்றேயாகும். இவ்வமைப்பினை வேறு எவ்விடத்திலும் காணமுடியாது. இக்கோயிலின் ஸ்தல விருட்சமாக வில்வமரம் அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும். கோயில் தீர்த்தம் சிவகங்கை என வழக்கப்படுகிறது. பரிவார மூர்த்திகளாக விநாயகர், ஷண்முகர், பைரவர், சனீஸ்வரன், நவக்கிரகம், சந்தானக் கோபாலன், சண்டேசுவரர் ஆகியவர் களுக்கு தனித்தனிக் கோயில்கள் உண்டு. சிவனின் கர்ப்பக்கிருக கோஷ்டங்களில் துர்க்கை, பிரம்மா, லிங்கோத்பவர், தக்ஷணாமூர்த்தி, தீர்த்தகணபதி ஆகியவர்களும், அம்பாள் ஆலயக் கோஷ்டங்களில் பிரம்மி, மகேஸ்வரி, வைஷ்ணவி ஆகியவர்களும் அமைந்துள்ளனர். கொடிமரத்தின் முன் அமைந்துள்ள ஆதாரக் கணபதியின் சிற்பச் சிறப்பும், திருவுருவும் கண்கொள்ளாக் காட்சியாகும். ஸ்தயமண்டபத்தில் அதிகார நந்தியும், பலிபீடமும், மகாமண்டபத்தில் தர்சனநந்தியும் பலிபீடமும் அமைந்துள்ளன.

உற்சவ மூர்த்திகளாக விசாலாட்சி, விஸ்வநாதரும் மஹாசக்தியும், பிரியாவிடை நாயகரும் (பிரதோஷ மூர்த்தி) விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோரும் காட்சிதருகின்றனர். இங்கு ஆகமவிதிப்படி எந்நாளும் கிரமமாகப் பூஜைகள் நடைபெறுகின்றன.

இத்தனை சிறப்பு வாய்ந்த திருத்தலமானது கால வெள்ளத்தினாலும் வேற்று நாட்டு அந்நிய மதத்தவர்களின் ஆட்சியதிகாரங்களினாலும் சிதைவடைந்தது. இன்றைக்கு ஏறக்குறைய நூற்று எழுபத்தைந்தாண்டுகளுக்கு முன் குமரப் பெருமானின் திருநாமம் பூண்டவரும் கௌணியர் குலத்தவருமாகிய சிவஸ்ரீ கார்த்திகேயக் குருக்கள் அவர்கள் பழைமையும் பெருமையும் வாய்த்த அந்த இடத்தைக்கிரியம் செய்து அதில் ஆலயமைத்து பூஜை, உற்சவங்கள் வழிபாடுகள் வேதசிவாகம முறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வழுவாது நடத்தி வந்தார். அவரைத் தொடர்ந்து அவரது வழித்தோன்றல்கள் நடத்தி வந்தார்கள். சிவஸ்ரீ கார்த்திகேயக் குருக்கள் இவ்வாலயத்தை மேற்கு வாசலாக அமைத்ததற்குக் காரணமும் உண்டு. ஆன்மார்த்தமாக செய்யப்படும் சிவபூஜையிலும் யாகங்களிலும் மேற்குத் துவாரத்திலேயே நித்தியத் துவார பூஜை செய்யப்பட வேண்டும் என வேதசிவாகமங்களில் விதிக்கப் பட்டுள்ளது. இறைவனின் சத்யோஜாத முகத்தை அபிமுகமாகக் கொண்டு துவார பூஜை செய்து இறைவனை வழிபடுவோர் போக, மோக்ஷங்களை இலகுவில் பெறுவார்கள். முருகப் பெருமான் சிவபூஜை செய்து வழிபாடாற்றிய இத்திருத் தலமும் மேற்கு நோக்கிய சன்னிதியாக அமைந்துள்ளமை மேற்கூறிய ஆகம விதிகளுக்கு விளக்கமாக இருக்கின்றது.

சிவஸ்ரீ கார்திகேய குருக்களின் பின் அவரது மைந்தரான சிவஸ்ரீ சபாபதிக் குருக்களும், அதன் பின் அவரது மைந்தன் சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்களும் ஆலயத்தை ஆகமவிதி தவறாது நடத்தி வந்தனர். இவரை அவ்வூர் மக்கள் சாமிஐயா என்று அன்பாக அழைப்பார்கள். அதன் பின் அவருடைய மைந்தன் சிவஸ்ரீ சோமாஸ் கந்தக்குருக்கள் மிகவும் சிறப்பாக ஆலய நிர்வாகத்தை நடத்தினார். இவர் இருக்கும்பொழுது ஆலயக் கட்டிடம் மிகவும் பழைமை வாய்ந்ததால் இடிந்து விழுந்து விடுமோவென்று எண்ணி முழுமையாகப் புனருத்தாரணம் செய்ய எண்ணினார். ஆயத்தங்கள் செய்து கொண்டு இருக்கும்பொழுது அவரின் எண்ணத்திற்கு மாறாக அவரைச் சிவன் சிவபதமடையப் பண்ணிவிட்டார். தொடர்ந்து அவர் விட்ட பணியை மகன்மார்கள் நினைத்து பாலஸ்தானம் செய்து புனருத்தாரண வேலையை ஆரம்பித்தனர். அது ஓரளவுக்கு முற்றுப் பெற்று 01–06–2006இல் கும்பாபிஷேகம் சிவன் அருளால் நடத்தப்பட்டது.

இக்கோவிலில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளாவன வைகாசி விசாகத்தை இறுதி நாளாகக் கொண்டு 10 நாள் மஹோத்சவம் நடைபெறுகிறது. ஒன்பதாம் நாள் தேர்த்திருவிழாவும் சிறப்பாக நடைபெறும். புரட்டாதி மஹா நவமியை இறுதியாகக் கொண்டு பத்துத் தினங்கள் ஸ்ரீ விசாலாட்சி அம்பாளுக்கு விசேஷ பூஜை லக்ஷார்ச்சனை ஹோமம் என்பன நடைபெறும். மார்கழியில் திருவெம்பாவை உத்சவத்தில் 9ஆம் நாள் தேர் உத்சவமும் 10ஆம் நாள் ஆருத்திரா தரிசனமும் சிதம்பரத்தில் நடைபெறுவதுபோல் மிக விமரிசையாகக் கொண்டாடப் படும். மஹாசிவராத்திரியன்று நான்கு ஜாமங்களிலும் பூஜைவழிபாடுகளும், லிங்கோத்பவர் காலத்தில் (அர்த்தசாமத்தில்) லிங்கோற்பவருக்கு ஆகம விதிப்படி அபிஷேகம், வில்வத்தால் பூஜை உத்சவம் என்பனவும் சிறப்பாக நடைபெறும். திருக்கார்த்திகை அன்று ஷண்முகப் பெருமானுக்கு விஷேச ஆராதனையும் உத்சவமும் சிறப்பாக நடைபெறும்.

இத்தலத்திலுள்ள முருகப் பெருமானை அருணகிரிநாதர் வணங்கித் திருப்புகழ் பாடித் துதித்தார் என வரலாறு கூறுகின்றது. அப்பாடல் வருமாறு

புவியதனிற் ப்ரபுவான
புகலியில்வித் தகர்போல
அமிர்தகலித் தொடைபாட
அடிமைதனக் கருள்வாயே
சமரிதெிர்த் தகர்மானத்
தனிய்யில்விட் டருள்வோனே
நவசிவாயப் பொருளானே
ரஜதகிரிய பெருமானே

மணிலணி முருகேச பண்டிதர், பிரம்மஸ்ரீ பி.வி.சிதம்பர சாஸ்திரிகள் இன்னும் பெயர் குறிப்பிடப்படாத பல அடியார்களாலும் பாடப் பெற்ற தனிப்பாடல்களும் உண்டு.

## துதிப்பாடல்கள்

திருக்குட வாயிற் கோட்டம் திகழ்ந்திடும் தேவே போற்றி
அருட்பெருங் குணத்தால் போற்ற யம்மையோர் பாகா போற்றி
இருட்பெருந் துன்பம் நீங்கி உலகெலா முய்ய வெள்ளிப்
பொருப்பிடை யாடு கின்ற புண்ணியா போற்றி போற்றி

சீர்மேவும் சுன்னாகப் பதியில் வாழும்
செல்லமலி குடவாயிற் கோட்டம் மேவும்
பார்முதலாம் பஞ்சபூ தங்கள் சூழும்
பகரரிய பெருமைமிகும் தேவ தேவே
கார்மருவும் சோலைகளிற் குயில்கள் கூவ
கண்களிப்ப வணியணியாய் மயில்களாட
சூர்தடிந்த மாவீரன் செவ்வேள் போற்ற
கரர்துதிப்ப நடனமிடும் செல்வா வாழி

இத்துணை பழைமையும் சிறப்பும் வாய்ந்த இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் விசாலாட்சி சமேத விஸ்வநாதரைச் சென்று வணங்குபவர்களுக்கு, வேண்டுவோர் வேண்டுவதையீந்து அருள்புரியத் தவறார்.

''அன்றே யென்றன் ஆவியும் உடலும் உடைமையெல் லாமும்
குன்றே யனையாய் என்னையாட் கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக்குண்டோ எண்டோள்முக்க ணெம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே''

**குறிப்பு:** இத்திருத்தல வரலாறு அமரர் சிவஸ்ரீ சோ.சோமாஸ்கந்தக் குருக்களால் எழுதப்பட்ட வரலாற்றைத் தழுவியது.

''சிவாய நம''

சி. சிவயோகநாதன்
இளைப்பாறிய விரிவுரையாளர்
(மலாலி ஆசிரியர் கலாசாலை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 10



# பச்சை வயல் கனவு

தாமரைச்செல்வி

**கா**டு, காட்டுக்குள் இந்தச் சின்னக் கோவில். அதில் இத்தனை சனங்கள்.

அவர்களால் நம்பமுடியாத காட்சியாக இருந்தது.

பல தலைமுறையாக வாழ்கின்ற இந்த ஊரிலிருந்து மட்டுமல்ல. சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்தும் ஆட்கள் வண்டில் கட்டி வந்திருந்தார்கள்.

கோவிலுக்கு எதிர்ப்புறம் தள்ளி இருந்த வயல்வெளியில் சிவம் வண்டிலைக் கொண்டுபோய் விட்டு வந்தான். எல்லோரும் கோவில் வாசலுக்குப் போனார்கள். ஒரு பக்கத்தில் அடுப்பு வைத்து பானைகளில் பொங்கிக் கொண்டிருந்தார்கள். சிலர் வாசலில் இலை விரித்து படையலிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கோயிலைச் சுற்றி வந்தார்கள். இடது புற நீளக் கொட்டிலில் பெரிய பானைகளில் அன்னதானம் கொடுப்பதற்கான சமையல் நடந்து கொண்டிருந்தது.

அதன் வாசலில் நின்ற நடுத்தர வயதுள்ள மனிதர் பக்கத்தில் நின்றவனிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

''விநாசி ! நீ போய் எங்கட ஆட்கள் எல்லாரையும் சேர்த்து வைச்சிரு. நான் வாறன்.''

மரியக்கண்டு மெல்லிய குரலில் சொன்னான்.

''இவங்காதன் கூத்துப் போடுறவங்க. அந்த ஐயாதான் காத்தவராயனுக்கு ஆடுறவங்க. தலைமுடியைப் பாருங்க. அவர்தான் அண்ணாவியார் பெரிய தம்பி.''

சிவம் அவரை நனறாகப் பார்த்தான். தலையை வாரி இழுத்து கொண்டை முடிந்திருந்தார். காதில் கடுக்கனும், நெற்றியில் சந்தனப் பொட்டும் இருந்தது. வெள்ளை வெளேரென்று வேட்டிகட்டி இடுப்பில் சால்வை சுற்றியிருந்தார். அவரின் தோற்றத்தில் கம்பீரம் இருந்தது. பக்கத்தில் நின்ற விநாசிக்கு இவர்கள் வயதுதான் இருக்கக்கூடும். மெல்லிய தோற்றத்தில் சிறிது உயரமாய் இருந்தான். தலைமயிர் தோள்வரை வளர்ந்திருந்தது. விநாசி திரும்பி சற்றுத் தள்ளி நின்ற இவர்களைப் பார்த்து விட்டு கிட்ட வந்தான்.

''நீங்கள்தாள் ராத்திரிக்கு கூத்துப் போடப்போற ஆட்களா?'' செல்லத்துரை கேட்டார்.

''ஓமோம்.. நாங்கதான் போடுறம். ஐயாதான் பெரியதம்பி அண்ணாவியார்.''

''நீங்க..''

''நான் விநாசி. ரெண்டு வருசமாய் இவரோட வந்து இருக்கிறன். இப்போதைக்கு சின்ன வேசம்தான் ஆனா ஒரு நாளைக்கு நல்ல வேசம் போடுவன்.''

''நீங்கள் எங்க இருக்கிறனீங்கள்.''

''இங்க குஞ்சுப்பரந்தனில் தான். நான், அண்ணாவியாரும் தூரத்துச் சொந்தம். இந்தக்கூத்து ஆசையால மீசாலையிலயிருந்து வந்து இவரோட இருக்கிறன். இந்த கூத்து முடிய வாற கிழமை கண்டாவளை கோயில்ல கூத்துப் போடப் போறம். கோயில் எல்லாம் சுத்திப் பாத்தனீங்களே.''

''ஓமோம். சின்னக்கோயில் எண்டாலும் பேர் பெற்ற கோயில் போல கிடக்கு.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பாருங்கோவன் மீசாலை கொடிகாப்பக்கத்து சனம் நேற்றே வள்ளம் ஏறி வந்திட்டுதுகள். பூநகரி பக்கத்திலயிருந்தும் வண்டில் கட்டி வந்திருக்குதுகள். இவையள் நிண்டு கும்பிட்டு விடிய நீர்ச்சோறும் சாப்பிட்டிட்டுத்தான் போவினம்.''

''கனகாலமாய் இந்தக் கோயில் இருக்குதே.''

கார்த்திகேசு கேட்டான்.

''இந்தக் கோயிலை தொடக்கி வைச்சது யானை பிடிக்கிற பணிக்கர்தான். அந்த நாளில முத்துக் கொம்பனும் பவளக் கொம்பனும் பிடிபட வேணும் எண்டு அம்மனுக்கு நேர்த்தி வைச்சு கும்பிட்டினம். அவைக்குப் பிறகு இங்க கரையோரங்களில் மீன் பிடிக்கிற முக்கியர் நல்ல மீனுகள் நிறைய பிடிபட வேணும் எண்டு நேர்த்தி வைச்சுக் கும்பிட்டினம். இப்ப வயல் செய்யிற வேளாளர் நல்லாய் நெல்லு விளைய வேணும் எண்டு நேர்த்தி வைச்சு பொங்குகினம். கேட்டதெல்லாம் அம்மன் தருவா எண்ட நம்பிக்கைதான்.''

''அதாலதான் இத்தினை சனம் வருகுதுகள்போல'' வியப்புடன் சொன்னான் சிவம்.

''எங்கட விதானையார் வாறார். இவர்தான் சிவலிங்கம் விதானை. இந்த ஊர் ஆள்தான். இங்கேயே பிறந்து வளர்ந்தவர்.'' இடுப்பில் வேட்டி அணிந்து சுற்றி சால்வை கட்டி நெற்றியில் திருநீறு சந்தனத்துடன் நல்ல உயரமான அதற்கேற்ற பருமனான தோற்றத்தில் வந்து கொண்டிருப்பவரை சிவம் பார்த்தான். அவனை விட ஐந்தாறு வயது அதிகம் இருக்கக்கூடும். இவன் தனக்கு நல்ல பழக்கம் என்று வேலாயுதம் சொன்னது நினைவுக்கு வந்தது.

''என்ன விநாசி இதில நிற்கிறாய். அன்னதானம் ஒழுங்குகள் நடக்குதே.'' என்று கேட்டுக் கொண்டே கிட்ட வந்தார்.

நாங்கள் அஞ்சாம் வாய்க்காலில் இருக்கிறனாங்கள். நான் வேலாயுதத்தின்ர தம்பி.''

''அட வேலாதத்தின்ர தம்பியே. அண்ணையோட வந்து வயல் செய்யிறியே. வேலாயுதத்தை எனக்குத் தெரியும். காணி எடுக்க விண்ணப்பம் கொடுத்திருக்கிறார். எப்பிடியும் காணி கிடைச்சிடும் தம்பி. நான் விசாரிச்சது எண்டு அண்ணையிட்ட சொல்லிவிடும். இங்க ஏரம்பவும் வருகுது. எல்லாருமாய் கும்பிட்டுப் போங்கோ.''

விதானையார் நடந்துபோய் அண்ணாவியாருடன் நின்று கதைத்துக் கொண்டிருந்தார்.

''நான் கடிதம் குடுக்க வாறனான் தானே. அதால என்னை விதானையாருக்கு நல்லாய் தெரியும். என்ன விநாசி, கூத்து எல்லாம் ஆயத்தமே.''

''எல்லாம் ஆயத்தம் தானே. விதானையார் எங்களுக்கு நல்ல ஆதரவு'' என்ற விநாசி விதானையாரை திரும்பிப் பார்த்துவிட்டுச் சொன்னான்.''

''விதானையாரில இங்க உள்ள சனங்களுக்கு நல்ல பிடிப்பு. நாலைஞ்சு வருசத்துக்கு முந்தி வெள்ளைக்காரர் தான் இவரை விதானை ஆக்கினவை.''

''வெள்ளைக் காரரோ...''

மரியக்கண்டு வியப்புடன் கேட்டான்.

''நாலைஞ்சு வருசத்திற்கு முந்தி யாழ்ப்பாணத்து ஏஜென்டாய் இருந்த ஹட்சன் ஐயா ஜீப்பில் இந்த ஊருக்கு வந்து எல்லாரையும் கூட்டி வைச்சுத்தான் விதானையைத் தெரிவு செய்தவராம். ரெண்டுபேர் போட்டிக்குக் கேட்டவையாம். இவையில் ஆருக்கு ஆதரவு கையை உயர்த்துங்கோ எண்டு ஹட்சன் ஐயா சொல்ல முழுச்சனமும் சிவலிங்கம் விதானைக்குத்தான் கையை உயர்த்தினவையாம். அதிலயிருந்து இவர்தான் விதானை யாய் இருக்கிறார். நல்ல மனதுள்ளவர். கெட்டிக்காரர். சின்ன வயதிலேயே விதானையாய் வந்திட்டார்.''

கதைத்துக் கொண்டிருந்த விநாசி அன்னதானம் கொடுப்பதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டதைப் பார்த்துவிட்டு,

''நீங்கள் சாப்பிடுங்கோ. நான் போட்டுப் பிறகு வற்து உங்களைப் பார்க்கிறன்.'' என்று சொல்லிவிட்டு கொட்டிலின் பக்க வழியாகப் போனான். அவர்கள் மற்றவர்களுடன் சேர்ந்து தாமரை இலையில் அன்னதானச் சோறு வாங்கிச் சாப்பிட்டார்கள். சிவலிங்கம் விதானையார் சாப்பாடு கொடுப்பதை கவனித்துக் கொண்டிருந்தார்.

அவர்களின் பசிக்கு சோறு அமுதமாய் வயிற்றுக்குள் இறங்கியது. சாப்பிட்டுவிட்டு கோவிலின் பக்கத்தில பாலை மர நிழலில் அமர்ந்து கொண்டார்கள். இரவு கூத்து நடப்பதற்கு அருகே ஒழுங்குகள் செய்து கொண்டிருந்தார்கள். சிறுசிறு காட்டுக் கட்டைகளை நெருக்கமாக சதுரவடிவில் நட்டுவிட்டு உட்புறம் மண்ணைக் கொட்டி நிரப்பி அழுத்தி மேடை தயார் செய்தார்கள். விநாசியும் அங்கு நிற்பதைப் பார்த்துவிட்டு இவர்களும் போய் மண் வெட்டி உதவி செய்தார்கள்.

இந்த கூத்து ஆசையால்தான் வீட்டை விட்டு ஓடிவந்த கதைகளை விநாசி சொல்லிச் சிரித்தான். வெற்றிலை போட்ட சிவந்த வாயுடன் பாவனையோடு பேசும் விநாசியின் பேச்சு அவர்களுக்கு பிடித்தமானதாய் இருந்தது. இரவு மேடைக்கு முன்புற வெளியில சனங்க ஆவலாய் அமர்ந்திருந்தார்கள். மேடைக்கு சமீபமாக சிவமும் மற்றவர்களும் அமர்ந்து கொண்டார்கள். மேடையின் இருபுறங்களிலும் கோவிலின் சுற்றுப் புறங்களிலும் தேங்காய் எண்ணெயில் தோய்த்த பந்தங்கள் எரிந்தன. அவற்றின் வெளிச்சம் அந்த இடத்தையே பிரகாசமாக்கியது.

மேடையில் நடிக்கும் அனைவரும் ஒன்று கூடி சபைக்கு வணக்கம் சொன்னார்கள். தீபங்களின் வெளிச்சத்தில் அவர்களின் ஆடை அலங்காரங்கள் பளிச்சென்று மின்னியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பெரியதம்பி அண்ணாவியார் இதுக்கென்றே இந்தியாவிலிருந்து பட்டு உடுப்புக்கள் எடுப்பித்தவர் என ஏரம்பு சொன்னான். கூத்து ஆரம்பமாகியது.

ஆரம்பத்தில் சின்னக் காத்தான் வந்து ஆடிய பிறகு பெரியகாத்தானாக பெரியதம்பி அண்ணாவியார் ஆடிக்கொண்டு மேடைக்கு வந்தார். அவரது கம்பீரத் தோற்றமும் கணீரென்ற குரலும் அந்த காத்தவராயனையே கண்முன் நிறுத்தியது.

சிவம் முன்பும் சில கூத்துக்கள் பார்த்திருக்கிறான். இன்னைக்குப் பார்க்கின்ற இந்தக் கூத்து அவைகளை விட நன்றாய் இருப்பதாக மனதுக்குத் தோன்றியது. விநாசி வேடன் பாத்திரத்தில் இரண்டு காட்சிகளில் வந்து ஆடினான். விடிந்தது தெரியவில்லை.

கிழக்கு வெளுத்து வானில் வெளிச்சம் வந்த போது கூத்து நிறைவு பெற்றது. பாட்டும் தாளமும் அவர்களின் ஆட்டமும் அனைவரையும் தம்மை மறந்து பார்க்கச் செய்திருந்தது.

விநாசியைத் தேடிப்போய் சொல்லிக்கொண்டு அவர்கள் புறப்பட்டார்கள்.

''அடுத்த வருசமும் வரவேணும்'' என்றான் கார்த்திகேசு.

''ஓமோம். நானும் அதைத்தான் சொல்ல வந்தனான்.''

''ஊரில இருக்கிற சனமெல்லாம் கூத்தில நடிச்சிருக்கும் போல கிடக்கு'' என்றார் செல்லத்துரை.

''ஊர்ச்சனத்துக்கும் உப்பிடி கூத்துக்கள் எண்டால் விருப்பம் தானே. அண்ணாவியார் என்னமாய் ஆடிப்பாடி நடிச்சார். இந்தத் திறமை பிறவியில வரவேணும்'' என்றான் சிவம்.

''ரெண்டு காட்சியில வேடனாய் வந்தாலும் விநாசியும் நல்லாய் நடிச்சான். அவனுக்குள்ள சரியான ஆசை இருக்கு. ஒரு நாளைக்கு கூத்தில பெரிய ஆளாய் வந்திருவான்.''

''நானும் நினைக்க கார்த்திகேசு நீ சொல்லிப் போட்டாய்'' கோவிலுக்கு வந்தது மனதுக்கு நிறைவாய் இருந்தது. கார்த்திகேசுவை அவன் கொண்டுபோய் விட்டுவந்து பகல் என்றும் பாராது அலுப்புடன் படுத்துவிட்டான். ஒரு மாதத்தின் பின் ஒரு மாலை நேரத்தில் சிவம் மயிலரின் கடைவாசலில் நின்றபோது வடக்கு திசையிலிருந்து நான்கு வண்டில்கள் வரிசையாய் வந்து சந்தியில் நின்றன.

''வன்னிவிளாங்குளம் அம்மானாச்சியின்ர பொங்கலுக்கு சாமான்களை ஏத்திக் கொண்டு பண்ட வண்டிலுகள் போகுது.'' என்றார் மயிலர். சிவத்துக்கு மாப்பாணரின் நினைவு வந்தது. திரும்பி வண்டில்களை உற்றுப் பார்த்தான். முன் வண்டிலில் இருந்த மாப்பாணர் அங்கிருந்தபடியே ''எட தம்பி சிவத்தான்'' என்று சத்தமாய்க் கூப்பிட்டார்.

''சிவம் வண்டில்களுக்கு கிட்டப் போனான். எதிர் பாராமல் அவரைக் கண்டது சந்தோசத்தைத் தந்தது.

''அம்மானாச்சின்ர வைகாசி விசாகப் பொங்கல் அல்லே. வாழைக்குலை, தேங்காய், பிலாப்பழம் எல்லாம் ஏத்திக் கொண்டு பொங்கலுக்குப் போறம்.'' மெய்யே நீயும் வாவனடாப்பா.

''அய்யோ. அவ்வளவு தூரம் வர ஏலாதண்ணை. வயல் வேலையும் இருக்கு. விட்டிட்டு வர ஏலாது.''

''சரி பிள்ள பார்த்து அடுத்த வருசம் வாவன். வரட்டோப்பா. உன்னைக் கண்டிட்டுத்தான் நிண்டனான். அண்டைய சவாரிக்குப் பிறகு உன்னைக் காணேலை. இங்க வயல் செய்யிறியாம். மெய்யே பிறகு சவாரிக்கு வரேலை. நீயும் இங்க வந்திட்டாய். உன்ர சவாரி மாடுகளை விற்கிறதாய் இருந்தால் எனக்கொரு சொல்லு சொல்லிப்போடு. வரட்டே.''

வண்டில்கள் சந்தி கடந்து மெதுவாய் ஒன்றன் பின் ஒன்றாய்ப் போனது. ஒரு நிமிடம் நின்று பார்த்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்துக்குப் பரந்த திடலும் மாடுகளின் ஓட்டமும் ஆட்களின் ஓவென்ற ஆரவாரமும் கண்களில் மின்னி மின்னி மறைந்தது.

ஒரு உலகத்திலிருந்து இன்னொரு உலகத்திற்கு வந்ததுபோல் தோன்றியது அவனுக்கு.

தொடரும்



## மாதமொரு சமையல் – ஆலு போண்டா

**தேவையான பொருட்கள்**

| | | | |
|---|---|---|---|
| பெரிய வெங்காயம் | : 1 கப் | கடுகு | : 1 டீஸ்பூன் |
| உருளைக் கிழங்கு (வேக வைத்து பிசையவும்) | : 1 1/2 கப் | மஞ்சள் பொடி | : 1 சிட்டிகை |
| | | சமையல் சோடா | : 1/2 டீஸ்பூன் |
| பட்டாணியும், கேரட்டும் | : 1 1/2 கப் | இஞ்சி | : 1/4 இன்ச் |
| பச்சை மிளகாய் (நறுக்கியது) | : 1 | (பொடியாக நறுக்கவும்) | : |
| | | கொத்தமல்லித் தழை | : தேவைக்கேற்ப |
| எலுமிச்சை சாறு | : 1 டீஸ்பூன் | உப்பு | : தேவைக்கேற்ப |
| கடலை மாவு | : 1 டீஸ்பூன் | எண்ணெய் | : 5 டேபிள் ஸ்பூன் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி : நான் உங்களிடம் திருப்பி திருப்பி சொன்னேன். வீடு கட்டும்பொழுது கோயிலுக்கு பக்கத்தில் கட்டுவோம் என்றேன். நீங்கள்தான் சொன்னீர்கள். கோயிலுக்குப் பக்கத்தில் வீடு கட்டினால் கோயிலுக்கு வருபவர்கள் எல்லோரும் வீட்டுக்கு வந்து தொந்தரவு கொடுப்பார்கள் என்று, இப்பொழுது பார்த்தீர்களா எவ்வளவு கஷ்டப்படுகிறோம்.

கணவன் : இப்ப அதுக்கு என்ன வந்தது? ஏன் இப்படி புலம்புகிறாய்.

மனைவி : அரிசி விக்கிற விலையில கோயிலுக்கு பக்கத்துல வீடு கட்டியிருந்தா 3 வேளையும் வயிறார சாப்பிட்டிருக்கலாமே? புரிந்ததா.

கருத்து : காந்தன்

தாங்கள் வேண்டியபடி எதுவும் நடக்கவில்லை ; பிரார்த்தனைகள் நிறைவேறவில்லை என்று குற்றம் சாட்டி, மதம் மாறுபவர்கள் பற்றி...?

முட்டாள் ஒருவன் பத்து ரூபாய் கொடுத்து ஒரு லாட்டரி டிக்கெட் வாங்கினான். அந்த டிக்கெட்டுக்கு ஒரு கோடி ரூபாய் பரிசு விழுந்தது. ஒரு கோடி... ஒரு கோடி என்ற எதிர்பார்ப்புடன் பரிசு வாங்கப் போனான். ஆனால், முப்பது சதவிகிதம் வரி பிடித்தம் போக, எழுபது லட்சம் ரூபாய்தான் கிடைக்கும்... அதுதான் சட்டம் என்று சொல்லப்பட்டது.

அவனுக்கு வந்ததே கோபம்! யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்கள். நீங்களுமாச்சு... உங்கள் சட்டமும் ஆச்சு! நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் உங்கள் பரிசுத் தொகையை. மரியாதையாக இந்த டிக்கெட்டுக்கு நான் கொடுத்த பத்து ரூபாயைத் திருப்பிக் கொடுங்கள். நான் போய், வேறு மாநில லாட்டரி டிக்கெட் வாங்கிக் கொள்கிறேன்! என்று கூச்சலிட்டானாம் அந்த மடையன்!

நீங்கள் குறிப்பிட்ட மனிதர்களது நிலையும் இப்படித்தான். ஒரு மதத்தின் கடவுள் தரவில்லை என்றால், வேறொரு மதத்தின் கடவுள் தருவார் என்று மதம் மாறுவதும் இதே மனோபாவம்தான். இப்படிப்பட்டவர்கள், எழுபது லட்சத்தை இழந்து விட்டு, பழைய பத்து ரூபாய்க்காக பயணம் புறப்படுகிறார்கள்.

அவரவர் கர்ம வினைப்படியே தெய்வம் தருகிறது. இந்தச் சட்டத்தை மீற முடியுமா? எந்த லாட்டரியானாலும் வரி கட்டித்தானே ஆக வேண்டும்?! அதுபோல எந்த கடவுள் ஆனாலும் நீதிநெறிப்படித்தானே நன்மை தீமைகளை தர வேண்டி இருக்கும். வேறு மதத்துக்குப் போய்விட்டால், அந்தக் கடவுள் தகுதியற்ற ஒருவனுக்கு அள்ளிக் கொடுத்துவிட முடியுமா என்ன?

தெய்வீகம் பற்றி தெளிவற்றவர்களே, இதுபோன்ற காரணங்களுக்காக மதம் மாறும் விளையாட்டை நடத்தி வருகிறார்கள்.

நன்றி – சக்தி விகடன்

அண்மையில் கிழக்கு லண்டனில் சைவ முன்னேற்றச் சங்கம் அவர்களுடைய சொந்த கட்டிடத்தில் நடராஜருக்கு கனகசபை அமைத்துள்ளார்கள். இது பாராட்டப்பட வேண்டிய ஒரு விஷயம்.

இங்கு நடைபெற்ற கும்பாபிஷேக நிகழ்ச்சியில் ஒரு நாள் மாணிக்கவாசகரின் நமச்சிவாய வாழ்க நாதன்தாள் தான் வாழ்க என்ற திருவாசகம் ஒலிபெருக்கியில் ஒலித்துக் கொண்டிருந்தது. அங்கே வந்த ஒரு அம்மா இது என்ன இறந்த வீட்டில் பாடக்கூடிய பாடல்களை போடுகிறீர்களே என்று குறைப்பட்டு கொண்டார். இவருக்கு சைவத்தைப் பற்றி எதுவுமே தெரியவில்லை என்பது எனது எண்ணம். மாணிக்கவாசகரின் இந்த 95 வரிகளும் மிகவும் அர்த்தபுஷ்டியுள்ள திருவாசகம். இது கிறிஸ்தவர்களின் பைபிள் போன்றது. இந்த பைபிளை திருமணச் சடங்கிலும், ஈமச்சடங்கிலும் கிருஸ்தவ குருமார் வாசிக்கின்றனர். அதே போல் நல்ல விஷயத்துக்கும், கெட்ட விஷயத்துக்கும் பாடக்கூடிய ஒரே ஒரு மந்திரம் இது என்பதை சைவ மக்கள் அறிந்து கொள்வார்களாக!

**செய்முறை :**

- ஒரு கடாயில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கடுகு போட்டு பொரிக்கவும்.
- கடுகு பொரிந்ததும் நறுக்கி வைத்த வெங்காயம் போட்டு பொன்னிறமாக வதக்கவும். அரிந்த இஞ்சியைப் போட்டு வதக்கவும்.
- அது வதங்கியதும் கேரட், பட்டாணி, மஞ்சள்பொடி, உப்பு, பச்சைமிளகாய் அனைத்தையும் ஒன்றாக கலக்கவும்.
- சிறுதணலில் வைத்து 10 நிமிடம் வதக்கவும். பிசைந்த உருளைக்கிழங்கை சேர்த்து நன்றாக கலக்கவும். கொத்தமல்லித்தழை சேர்க்கவும். எலுமிச்சை சாறு ஊற்றவும்.
- அடுப்பில் இருந்து இறக்கி ஆற விடவும்.
- ஒரு பாத்திரத்தில் கடலை மாவு, 3 டீஸ்பூன் எண்ணெய், 3/4 கப் தண்ணீர், 1/2 டீஸ்பூன் உப்பு, சிறிதளவு சமையல் சோடா சேர்த்து நன்றாக கலக்கவும்.
- இப்பொழுது உருளைக்கிழங்கு கறியை சிறு, சிறு உருண்டைகளாக பிடித்து மாவில் தோய்த்து எண்ணெயில் போட்டு பொரித்தெடுக்கவும்.
- சூடாக ஆலு போண்டா தயார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வாசகர் கடிதம்...

கனம் பதிப்பாசிரியர்
தமிழர் தகவல்
இலண்டன்.

இலண்டன்.
4-8-08.

ஐயா,

தங்கள் ஜூலை 08 இதழ் பார்த்தேன். 32ம் பக்கத்தில் திரு. K. ரங்கநாதன் ஐயா அவர்களுக்கு விளாசிவிடப்பட்ட தங்கள் அபிப்பிராயத்தை வாசித்து அதிர்ச்சியடைந்தேன்.

விக்கெட் ஹில் என்பதை உயர்காசந்தின்று என்று மொழிபெயர்க்கிறீர்கள் என இதை எழுதியிருக்கிறீர்கள். இலங்கை என்று தமிழிலும் ஸ்ரீலங்கா என்று ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் வழக்கிலுள்ளதை பதிப்பாசிரியர் மறந்து விட்டாரா? இதே மாதிரி யாழ்ப்பாணம் - Jaffna - யாழ்ப்பாணம், பருத்தித்துறை - Pt. Pedro - பேதுறு தலை என்று வேறு விதமாக பல ஊர்கள் இருப்பதையும், தமிழ்ப் பகுதிகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வித்தியாசமாக இவ் ஊர்ப்பெயர்கள் எழுதப்படுவதை பதிப்பாசிரியர் அறிந்திருக்கவில்லையா? ஏன் பதிப்பாசிரியர் பிறந்த ஊர் Kayts - ஊர்காவற்றுறை என்று வேறு விதமாக வழக்கிலுள்ளதை மறந்துவிட்டாரா?

இப்படியெல்லாம் பெயர்கள் மாற்றமடைந்து பாவனையில் உள்ளபோது திரு. ரங்கநாதன் மேல் உள்ள தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியால் இக்கடிதம் எழுதப்பட்டது போல் தெரிகிறது.

இச்சஞ்சிகையில் 37ம் பக்கத்தில் திரு. பூபாலபிள்ளை சங்கரலிங்கம் இலண்டன் சாகரில் சித்தாண்டிச் சிவனின் போதகம் என எழுதப்பட்டுள்ளது. போதகம் என்ற சொல்லின் அர்த்தம் ஒரு கைப்பெரியவரை கிறிஸ்தவரா என்று என்னுடைய நினைக்க வைக்கிறது. இப்படியான சொற்பிழைகள் வராது பார்த்துக் கொண்டால் நன்று.

செ. சிவசுந்தரம்
இலண்டன்.

இலண்டன் ...


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

**பாவலர் கந்தையா இராஜமனோகரன்** B.Sc.Eng.; C.P.Eng.; M.I.E. Aust.; M.I.Pet. (UK); M. ASME (USA)
**மருத்துவர் சசிகலா இராஜமனோகரன்** M.B.B.S.; M.Sc. (Lond); Dip GUM; D.F.F.P; F.R.C.P.(UK)

தொலைபேசி: 00 44 79 31 53 13 05
மின்னஞ்சல்: krmano@hotmail.com

Northwood
United Kingdom

**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே !**

11.08.2008

திரு சிவானந்தசோதி
தமிழர் தகவல்.

அன்புடையீர், வணக்கம்.

தமிழர் தகவலின் 61வது இதழைப் படித்தேன். சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிரிவுத் துயர் சொல்லிலே அடக்க முடியாதது. இம் மடலிலே அவர்களின் பணி தொடர்பான பல செய்திகளைத் தாங்கி வந்தமைக்காகத் தங்களைப் பாராட்டுகின்றேன்.

தாங்கள் என்னிடம் உயர்வாசற் குன்று பற்றிய ஒரு வினாவைத் தொடுத்திருந்தீர்கள். அதனை மேற்படி 61வது இதழிலும் படித்தேன். என்னைப் பொறுத்தவரையிலே விளக்கம் இதோ:

பெயர்ச் சொற்களை நாம் மொழிபெயர்த்தல் ஆகாது. பெயர்ச் சொற்களிலும் சில திசைச் சொற்களாகித் தமிழிலக்கணத்திற்கு ஏற்ப மாற்றமடையலாம். இதற்கு நல்ல உதாரணம் 'இலண்டன்'. இங்கு 'இ' தமிழிலக்கணத்தைப் பேணுவதற்குச் சேர்க்கப்பட்ட எழுத்து. ஆயினும் இது எல்லா வேளைகளிலும் ஏற்புடைத்தன்று. 'லண்டன்' என்ற சொல்லிற்கு 'இ' ஐச் சேர்த்ததாலே எந்தப் பாதிப்பும் எழவில்லை. நாம் முன்னர் அறுபதுகளிலே ஈழத்திலே க.பொ.த.ப பரீட்சைக்குக் கற்ற காலத்திலே அறிவியல் நூலொன்று ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. அதிலே ஆக்கியோன் 'இடட்லி தம்பு' என இருந்தது. நாமும் யாரோ ஒரு கிறிஸ்தவத் தமிழர் என எண்ணினோம். பல மாதங்களின் பின்னரே அவருடைய உண்மையான பெயர் 'டட்லி ஸ்ராம்ப்' என்று அறிந்தோம். பெயர்களைத் தமிழ் இலக்கணத்திற்கு ஆட்படுத்துவது பாரதூரமான பிழை என்பதற்கு இது நல்ல உதாரணம். இதைவிட இன்னுமொரு வகையான சிக்கலும் உள்ளது. உச்சரிக்கத் தெரியாத ஊரவர்களாலே சொற்கள் இயல்பாகவே திரிபுக்குள்ளாகுவது. கொக்குவிலிலுள்ள 'ஹம்டன் பாலம்' இதற்கு நல்ல உதாரணம். இன்று இது 'அம்பட்டன் பாலம்' எனப் பிழையாகக் கூறப்படுகின்றது.

உண்மையிலே எமது ஊர்ப் பெயர்களை எல்லாம் போத்துக்கேயர், ஒல்லாந்தர், பிரான்சியர், பிரித்தானியர் போன்றோர் எம்மை அடிமை கொண்டபோது தமது நாக்கினாலே உச்சரிக்கும் வசதிக்கேற்பத் திரித்தும் தமது நாடுகளிலுள்ள இடப்பெயர்களை இட்டும் எனப் பலவாறாக மாற்றினர். அவர்கள் அடிமைகொண்ட உலக நாடுகள் யாவற்றிலும் இதுவே நிலைமை. இதற்கு உதாரணமாக மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, ஆனையிறவு போன்ற ஈழத்து இடப் பெயர்கள் பலவற்றையும் திருவல்லிக்கேணி, பரங்கிமலை போன்ற தமிழ் நாட்டு இடப் பெயர்கள் பலவற்றையும் குறிப்பிடலாம்.

இனி 'உயர்வாசற் குன்று' என்ற சொல்லை எடுப்போம். யானும் தமிழ் நிகழ்ச்சிகளிலே இவ்வாறே கூறி வருகின்றேன். காரணம் குறிஞ்சி நிலத்தின் தலைவன் முருகன் மீதும் அவன் குன்றுதோறுமாடும் குமரன் என்பதிலும் உள்ள நம்பிக்கையும் அவ்வாறே அழைப்பதிலுள்ள இன்பமுமே. எனவே, கவிதைகளிலே சில இலக்கண வழுக்களை மன்னிப்பது போலே இறையன்பின் அடிப்படையிலே 'உயர்வாசற் குன்று' என்பதைத் தமிழிலக்கியத்திலே ஏற்கலாம்.

நன்றி.

இன்பமே சூழ்க. எல்லோரும் வாழ்க.

அன்புடன்,

க. இராஜமனோகரன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு முத்தையா பத்மநாதன் ( பரராஜசிங்கம் )**

கரம்பன் ஊர்காவற்றுரையில் ஒரு காலத்தில் புகழ் பெற்று விளங்கிய நொத்தாரிசு ராமலிங்கம் அவர்களிடம் தமிழ் எழுது வினைஞராக வாழ்க்கையை ஆரம்பித்த திரு முத்தையா பத்மநாதன் ( பரராஜசிங்கம் ) அவர்கள் 23. 08. 2008-ல் காலமான செய்தி என்னை மிகுந்த மனவேதனைக்குள்ளாக்கியது. அவர் தனது இரண்டு மகள் மற்றும் ஒரு மகனை விட்டு பிரிந்துள்ளார். மூன்று மாதத்துக்கு முன்னர் கொழும்பில் சுற்றி வளைத்த சிங்கள இராணுவம் தகப்பனையும், மகனையும் விடுதலைபுலிகள் என்ற பெயரில் கைது செய்தார்கள். எவ்வளவு முயற்சி செய்தும் மகனை விடுவிக்க முடியவில்லை. மகனின் பிரிவு இவரை இவ்வளவு விரைவில் இறைவனிடம் கொண்டு சென்றுவிட்டது.

இவர் அரசாங்க எழுது வினைஞர் சேவையில் தமிழ் மொழியில் தேர்வு எழுதி தெரிவு செய்யப்பட்டவர். வீடமைப்பு இலாகாவில் தனது முதல் பணியை ஆரம்பித்தவர். 30 வருடங்களாக அங்கேயே வேலை செய்த பின் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க பணிமனையில் கடமையாற்றியது குறிப்பிடத்தக்கது.

சொல்லும், செயலும் எவருக்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை. பத்மநாதனை பொறுத்தவரையில் இரண்டும் ஒன்று. அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தில் உறுப்பினராக இருந்து விடுதலை உணர்வாளராக கடமையாற்றினார். அவர் எந்த பணிமனையிலும் தனது கையெழுத்தை தமிழிலேயே வைத்து மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கியவர். தமிழரசு கட்சியிலிருந்து நவரட்னம் பிரிந்தபோது அவருடைய கொள்கையில் ஈடுபாடு கொண்டு அவருக்காக பாடுபட்டவர். விடுதலை உணர்வு மிக்க அவர், அவருடைய மகன் கைதுசெய்யப்பட்ட காரணத்தால் மன வேதனையடைந்து உடல் நலிவுற்றார். இவர் அரசாங்க சேவையிலிருந்த காலத்திலிருந்து கடைசி காலம் வரை வெள்ளை வேட்டி சட்டையுடன்தான் காணப்படுவார். சுத்த சைவமாக வாழ்ந்தவர். மிகுந்த கடவுள் பக்தி கொண்டவர். அவரைப் போன்ற கடவுள் பக்தி கொண்டவரை காண்பது அரிது. சந்தர்ப்ப வாதமாக அரசியல் பேசுகிற இந்த மக்களுள் உண்மையான விசுவாசியாக வாழ்ந்து சென்ற பத்மநாதனின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவனை பிரார்த்தனை செய்கிறேன். அன்னாரின் குடும்பத்துக்கும் ஆழ்ந்த துயரத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ம**யிற் பறவை பற்றிய நினைவுகள் திடீரென அவனது வான்பரப்பில் தூசிப்படலம் விலகி வழிவிட, மீண்டும் தோற்றம் கொண்டது. ஏழெட்டு வயதிலோ அல்லது அதற்கும் முன்னரோ என அவனுக்கு ஞாபகம் வரவில்லை. மனவெளியெங்கும் நிரம்பி, நீல நிறமாக, அதிலிருந்து வெடித்துச் சிதறும் பல வர்ண ஒளிச்சிதறல்கள் – வளைந்து நெளிந்து நர்த்தனங்கள் போலவும், ஓவியங்கள் போலவும், மாறி மாறி, புதுப்புது உருவெடுத்து – அவனது மன இருக்கையில் கொலுவீற்றிந்தன. அது ஒரு காலம்.

அதன் பின்பு, இந்த மயில் பறவை பற்றிய ஒளி அதிர்வுகள் காலத்துக்குக் காலம், இடை வெளி கூடுதலாகவும் குறைவாகவும் மனத்தின் ஞாபக மேடையில் தோன்றி மறைந்தன.

பின்னர் பல காலமாக மயில் பற்றிய நினைவுகள் அறுந்து போயின. மீண்டும் அவனது ஐம்பத்தைந்தாவது வயதில் அந்தப் பதிவுகள் உயிர்ப்பெய்தின. நீண்ட கால இடைவெளி ஒரு சில நொடிப் பொழுதுகளாக மட்டுமே குறுகிவிட்டது போலிருந்தது. அப்பொழுது அவனுக்கு அளவெட்டிக் கிராமத்தின் வாசனை மணத்தது.

**க**ருகம்புலம் சிறுவர் பாடசாலையில் அவன் அப்பொழுது மூன்றாம் வகுப்பு. கதிரவேலு சட்டம்பியார் பாடி, நடித்துக் கதை சொல்வார். ஒருநாள் ஏறுமயிலேறி விளை யாடும் முருகனைப்பற்றியும் சொன்னார். அப்போதுதான் மயிலைப்பற்றியும் சொல்லி யிருக்க வேண்டும்.

நல்லூர்த் தீர்த்த திருவிழாவில் அவனுக்குப் பாட்டி காட்டியது வெள்ளி மயில். அந்த மயிலை உயிராகவும் பார்க்க முடியும் எனப் பாட்டிச் சொல்லியிருந்தார்.

அந்த மயிலைப் பார்த்துவிட வேண்டு மென்ற ஆசை அன்றிலிருந்தே துளிர்விடத் தொடங்கியது.

அவனின் தந்தை காலைத் தவறாமல் கை நிறைய செவ்வரத்தம் பூக்களோடு வந்து சூரியனைப் பார்த்துக் கும்பிட்டப் பின் மாடக் குழியில் வைத்திருக்கும் முருகன் படத்துக்கு பூக்கள் சாத்துவார். தந்தையைத் தொடர்ந்து இவனும் விபூதி பூசிவிட்டு முருகன் படத்தைப் பார்த்தவாறு நிற்பான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முருகனின் கையொன்று மயிலின் கழுத்தை அணைத்தவாறு அவனுக்கு அழகின் சூட்சுமத்தைத் தோற்ற வைக்கும்.

நீல நிறம் பளிச்சிடும் அந்த நீள் வளைவுக் கழுத்தும் தோகையில் வரிசையாய் பரவிவிட்ட கண்பொட்டுகளும் அவனைப் பிரபஞ்ச வெளிக்கு அழைப்பது போலிருக்கும்.

மனமே முருகனின் மயில் வாகனம் என்பதெலாம் அவன் பிற்காலத்தில் உணர்ந்து கொண்டவை.

**அ**வனின் நண்பன் விக்கி ஒரு நாள் மயிலிறகு ஒன்றை வகுப்புக்குக் கொண்டு வந்தான். பாடப்புத்தகத்தின் நடுவே வைத்து விட்டால் 'படிப்பு வரும்' என்றும் மயிலிறகு குட்டிபோடும் என்றெல்லாம் கூறினான். மயிலிறகு கண்களில் பட்டால் 'குருடனாய்ப் போய் விடுவாய்' என்றும் எச்சரிக்கை செய்தான். இவற்றையெல்லாம் அவனின் மனம் காவ முற்படவில்லை. ஆனால் மயிலிறகுக் கண்ணில் அவன் கண்ட நிறங்கள் பூமிக்குரியதாகப் படவில்லை அவனுக்கு. நீண்ட நேரமாக அதையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனின் விருப்பைக் கண்ட விக்கி மயிலிறகை அவனிடம் நீட்டினான். மயிலிறகின் கண்பொட்டில் தெரிந்த நிறங்கள் தனித்தும், ஒன்றுசேர்ந்தும், யுகம் யுகமாகப் பரிச்சயமுள்ளதாக விரிந்தன. அவன் அதைப் பெற்றுக் கொள்ள மறுத்தது விக்கிக்குப் புரியவில்லை. அதைத் தனதாக்கிக் கொள்ள ஆசைப்படும் சிறுபிள்ளைத்தனம் அவனை விட்டு விலகியே இருந்தது.

**அ**வனின் தந்தை நகைத்தொழில் நகாசு வேலைக்காரர், வேலையில் மூழ்கிவிட்டால் உலகை மறந்துவிடுவார். பற்றி வைத்த சிகரெட் மேசையில் வெறுமனே புகைந்து கொண்டிருந்தது. தங்கப் பதக்கத்தில் கற்கள் பதித்துக் கொண்டிருந்தார். அந்தப் பதக்கத்தின் இரு பக்கவாட்டிலும் மயில்கள்தான். தோகையில் கற்கள் ஒளித்தெறிப்படைந்து நீலமாகவும் நெருப்பாகவும் மின்னல் வெட்டுகின்றன. மேசையில் இருந்த மெழுகுக் கட்டையை எடுத்துப் புரட்டிப் பார்க்கிறார். அப்போதுதான் மீண்டும் சிகரெட்டை எடுத்து வாயில் வைத்து இழுத்து விட்டு சிகரெட் கட்டையைத் தூர வீசிவிட்டு மீண்டும் பார்த்து ரசிக்கிறார். அவனும் முகத்தை உள்ளே செலுத்தி பார்க்கிறான். மயிலின் மிடுக்கான தோற்றம் அவனைத் தங்கரதத்தில் பயணிக்க வைத்தது. தன்னைப் போலவே தந்தைக்கும் மயிலின் பாதிப்பு இருப்பதாகவே அவன் எண்ணினான். இவ்வாறு மயில் பற்றிய பதிவுகள் அவனில் இருந்து தோற்றம் பெற்ற, உன்னத அவனின், மூன்று காலங்களுக்கும் நிலவின. அக உலகின் பெரும் பகுதியின் விரிவுக்கு மயிலே மூலப் பொருளாயிற்று.

**ச**ரோஜினி மாமியின் கல்யாணம் அவனுக்கு நினைவிருந்தது. ஆனால் மனதில் இருப்புக் கொண்டது வெளிக்கூடத்தில் விரித்திருந்த மயில் படங்கள் போட்டிருந்த கம்பளங்களில் படுத்திருந்தவாறு அந்த மயில்களைக் கம்பளங்களின் மென்மையோடு தடவிப் பார்த்தது மட்டுமே. அந்த ஞாபகம் முதுமை பெறாமல் இருந்தது.

**செ**ல்லச்சந்நதி தீர்த்தத் திருவிழாவுக்குப் புறப்படக் காவடிகள் தயாராகிக் கொண்டிருந்தன. செடில் குத்தி, உரு ஆடியபோது காவடிகள் தோள்களில் ஏறின. ஆட்டமும், களையும், வியர்வையும் உடுக்கு, பறை, தவில் வாத்தியங்களுடன் கலந்தன. அவனும் சில நண்பர்களுடன் காவடி பார்க்க வந்திருந்தான். மயில் இறகுகள் ஈவிரக்கமற்று மிக கொடுமையாகக் காவடிகளுக்குள் செருகிவிடப் பட்டிருந்ததைக் கண்டபோது மயிலின் துன்பம் அவனை வாட்டியது. மயில்களின் அழகு எவ்வாறு திடீரெனச் சூனியமாகிப் போயிருக்கும். அவனுக்கு அன்றைய காவடி

**- ஞானரதன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டம் சலனமற்ற நீரில் தோன்றிய அழகான நிழற் காட்சியொன்று குழப்பிப்போய் விட்டது போலிருந்தது.

என்றாலும் மனம் என்னும் வெண்திரையில் மயிலின் நிறங்கள் கொண்டு வரையப்பட்டிருந்த பல்லாயிரம் ஓவியங்கள், உயிரணுக்கள் போல, ஒன்று சேர்ந்து, பெருகி, அழிந்து மீண்டும் பலவாக உயிர்த்து நிரந்தரமான ஓவியப் பின்னல் களாகவே குடிகொண்டிருந்தன அவனின் ஆழ்மன விரிப்பில்.

**அ**வனும் நண்பன் விக்கியும் கும்பழா வழைப் பிள்ளையார் கோவிலின் வடக்கு வீதியோரம் உள்ள மகிழமரத்தில் ஏறிப் பழங்கள் தேடிக் கொண்டிருந்த போது மயிலின் குரல் கேட்டது. 'கோயில் மயில் வந்திட்டுதடா விக்கி. இறங்கி வா பாப்பம்' என அவன் நண்பனைத் துரிதப்படுத்தினான்.

**ம**யிலின் வடிவத்தைப் பற்றி அவனின் மனதில் பதிந்திருந்த பெறுமானத்தைவிட, நேரில் பார்த்தபோது கூடுதலாக இருப்பது போலவும் மாறாக குறைவாக இருப்பது போலவும் மனப்பதிவோடு முரண்பட்டுக் கொண்டன. மயிலின் கழுத்து அசைந்தபோது கண்ட துடிப்பு, கருநீல முத்துக்கள் வரிசையிட்ட கொண்டை, வெள்ளைச் சாயமிட்ட இமைகள், நெஞ்சுப் பகுதியின் நீலத் திரட்சி, நீல வரிகள், கபில நிற இறக்கைகள் இடைக்கிடை சில்லிட்டு உதறும்போது எழும் வண்டோசை, கூடுதலான சுமையோடு சமநிலை தழும்பும் தோகை, அவதானமாகக் கால்கள் அடியெடுத்து வைக்கும் நடையின் பவ்வியம், அவனுக்குத் தரிசனமாயின அன்று. சிறிது நேரத்தில் மயில் பறந்து கோவிலின் மணிக்கோபுரத்தில் சற்றுத்தரித்து விட்டு வானில் பறந்து மறைந்தது. இது மயிலின் தரிசனம்.

மயிலின் அசுர வடிவத்தின் தரிசனம் அவனுக்கு எத்தனையோ வருடங்களின் பின் கிடைத்தது. நீண்ட தோகையுடன் வானில் பறந்து சென்ற மயிலின் தோற்றம் அப்போது அழிந்து போயிற்று.

வடமராட்சியெங்கும் பறந்து, கொலை வெறிக்குரலில் வானம் அதிர்ந்திட நெருப்புச் சன்னங்களைப் பொழிந்து தள்ளிய அந்த உலங்கு வானூர்தியைக் கண்ட போது அழகும், மென்மையும், இனிமையும் பொருந்திய மயில் வாழ்ந்த இடத்தை எவ்வாறு மனிதனின் கொலை மயில் ஆக்கிரமித்தது! இனிய நினைவுகளோடு அவனும் அவனுடைய உறவுகளும் அவனுக் குரிய அடையாளங்களோடு வாழக் கூடாது என்பதில் குறி வைத்தது அது. பச்சை, ஊதா நிற உருமறைப்புத் தீந்தை தீட்டப்பட்டு, மயிலின் சாயலில், அவனின் வானத்தை வெடிமருந்துப் புகை கொண்டு நிறைத்தது அது. இரத்த நாளங்கள் வெடி அதிர்வுகளில் துடிதுடித்தன.

---

**கு**டும்பத் தலைவனுக்கு திடீர் சுகவீனம். அவசரகால பிரிவில் அவன் அனுமதிக்கப்படுகிறான். கணவனை காப்பாற்றித்தா என்று மனைவி கடவுளிடம் வேண்டிக் கொள்கிறாள். அந்த சமயம் பார்த்து பசுமாடு அம்மா என்று கத்துகிறது. இந்தப் பசு மாட்டையே தானமாக கொடுத்துவிடுகிறேன் என்று கடவுளிடம் மனைவி வேண்டுகோள் வைக்கிறாள். இரண்டு நாட்களில் கணவன் சுகமடைந்து வீடு திரும்புகிறான். நடந்த கதையை மனைவி கணவனிடம் கூறுகிறாள். உனக்கு என்ன பைத்தியமா. நான்கு நாட்கள் கழித்து வைத்திருக்கலாமே இந்த வேண்டுகோளை. அதுவும் இப்படிப்பட்ட பசுமாட்டை தானமாக கொடுப்பதற்கு என்ன பைத்தியமா என்று கேட்டான். பிறகு குடும்ப தலைவன் பசுமாட்டையும், அவர்கள் வீட்டில் வளர்ந்த பூனைக்குட்டியையும் சந்தைக்கு எடுத்துச் சென்றான். பசுமாட்டின் விலை 1 ரூபாய் என்றும், அந்த பசு மாட்டிடம் பால் குடித்து வளர்ந்த பூனைக்குட்டி அது என்றும், அதனுடைய விலை ரூ. 3000 என்றும், அந்த பூனைக்குட்டியை வாங்குபவர்களுக்குத்தான் பசு மாடு என்றும் கூறினான். ஒருவன் இவற்றை வாங்கிச் சென்றுவிட்டான். இவன் நேரே கோயிலுக்குச் சென்றான். சிவனே என் மனைவியின் வேண்டுதலை நிறைவேற்ற பசுமாடு விற்ற 1 ரூபாயை உண்டியலில் போடுகிறேன். பூனை விற்ற 3000 ரூபாயை வீட்டிற்கு எடுத்துச் செல்கிறேன் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டான். வீட்டிற்கு சென்றதும் இவன் வளர்த்த பூனை திரும்பவும் வீட்டிற்கே வந்துவிடுகிறது. பூனையை தேடிக்கொண்டு வாங்கியவன் வந்துவிட்டான். பூனையை விரட்டிச் சென்ற வீட்டுக்காரன் தடுக்கி விழுந்து விடுகிறான். திரும்பவும் வைத்தியசாலைக்கு செல்ல நேருகிறது. டாக்டர் சொல்கிறார், இவருக்கு உடனடியாக ஒரு ஊசி போடவேண்டும். அதன் விலை 3000 என்று. இப்படி இந்தக் காலத்தில் கடவுளிடமே பேரம் பேசுகிறார்கள்.

17.08.2008 அன்று மயிலாப்பூரில் நடைபெற்ற திருமுறை விழாவில் குன்றக்குடி பொன்னம்பலம் அடிகளாரின் பேச்சிலிருந்து...

ரசித்தவர் நா. சிவானந்த சோதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவிப்பறையில் சாவுக்கு அழைக்கின்ற மிகையொலி அது. வானில் தோன்றாத நேரங்களிலும் கேட்டது. வானூர்திகள், குண்டு வீச்சு விமானங்களின் ஒலிகளை நுண்ணியதாக கேட்பதில் காதுகள் தேர்ச்சி பெற்றன. வானத்திலிருந்து குண்டுளாய் அவலம் தொடர்ந்தது. ஊர்கள், மனிதர்கள், உடமைகள் எல்லாமே சிதறிப் போயின. எத்தனை நூற்றாண்டு காலம் பொத்திப் பொத்திப் பாதுகாத்து வந்த அவனின் ஆத்ம நிலப்பரப்பில் இரத்தம் கசிந்தது.

மயில் எண்ணெய், மயில் இறைச்சி, மயில் இறகுகள் விற்பனைக்காக வந்தன.

மந்திகை வைத்தியசாலைக்கு இறந்தவர் களையும், காயப்பட்டவர்களையும் ஏற்றிச் சென்ற வாகனத்தையும் துரத்தியது. நெல்லியடி புனித இருதயக் கல்லூரியில், அதற்கருகே அமைந்துள்ள தேவாலயத்தில், கூட்டைச் சுற்றிய தேனீக்களாக மக்கள் வாழ்விடங்களை விட்டுத் தஞ்சம் புகுந்திருந்தனர். தேவாலய வளவில் கஞ்சிக் கிடாரத்தைச் சுற்றி பூவரசம் இலைகளை கோலிவைத்தவாறு நீளும் கரங்கள். சின்னஞ் சிறிய கரங்களும்தான். கஞ்சியின் சூட்டைத் தாங்கிக் கொள்ள முடியாமல் பதறும் பிஞ்சு விரல்கள். இரண்டு நாட்களுக்குப் பிறகு ஒரு நேரக்கஞ்சி. அப்பொழுதும் அந்த மக்கள் கூட்டத்தின் மீது குண்டு மாரி பொழிந்தது. பஞ்சசீலத்திலிருந்து உருவமைக்கப்பட்ட அந்த உலங்கு வானூர்தி. கஞ்சிக்கிடாரத்திலும் இரத்தம் தெறித்தது. அவலக் குரல்கள் தேவாலயமெங்கும் நிறைந்து கர்த்தரின் சிலுவையில் ஒய்ந்தன.

கிளாலிக் கடற்கரையில் வன்னிக்குப் போய்ச் சேர்ந்துவிடவேண்டுமென்று குவிந்த உரப்பை மனிதர்களில் அவனும் ஒருவன். அம்மனிதர்களின் வாழ்வில் விழுமியங்கள் யாவும் அந்த உரப்பைகளில் அடக்கமாகி ஒரு நாகரிகமடைந்த மனித இனத்தின் வழித் தோன்றல்கள் அவமான முத்திரைக் குத்தப் பட்டுப் புற்றரைகளிலும், பாதை நெடுகிலும், சேறும் சகதியோடும் கிளாலிக் கடற்கரையில் காத்திருப்பதைக்கண்ட உலங்கு வானூர்திகள் திருப்தியடைவதற்குப் பதிலாக மேலும் கோபம் கொண்டன. சிங்கத்தின் வாய் அப்பிரதேச மெங்கும் அனல் தெறிக்கும் சன்னங்களை வீசின.

படகுப்பாதையெங்கும் மக்கள் பதுங்கிடம் தெரியாமல் நீரிலும், நிலத்திலும் புரண்டு கதறி அழுத குரலில் கிளாலி நீரேரி அதிர்ந்து கலங்கியது. உலங்குவானூர்திகள் சுற்றிச் சுற்றி தமது மேலாதிக்கத்தைத் தமிழரின் வான் பரப்பில் நிலை நிறுத்திக் கொண்டிருந்தன. நீரில் கரும்புகைகள் ஆங்காங்கே அடையாளமிட்டன. இது உனக்குரிய இடமல்ல என்று.

அவன் கிளாலிக் கடல் தாண்டி வன்னி மண்ணில் கால்பதித்த போது, அக உலகச் சிறையிருப்புக்கே விரும்பாத அவனுக்கு இந்தப் புறச்சிறையின் பாதிப்பு, எதை முதலில் உடைக்கவேண்டுமென நன்கு உணர்த்தியது. அப்பொழுதுதான் அவனின் மயில் உயிர்க்கும்.

திருமலைக் கடல் அன்று நீல நிறமாக மாறியிருந்தது. ஏனிப்படி உருமாற்றம் செய்து கொண்டது? அந்தக் கடல் மயிலாகப் பறந்து செல்லப்போகிறதா?

அவன் மகனும் இன்னும் சில போராளிகளும், அலைகள் நீல வரிகள் இட்டுச் செல்ல, இரைந்து கிழிந்தோடும் படகினில் பணியொன்று முடித்துத் திரும்புகையில் அந்தக் கொலைமயில் காத்திருந்தது. அவனின் மகனுடையதும், இன்னொரு போராளியினு டையதும் உயிர்களை குடித்து எக்காளமிட்டது.

அதன் பின்பு ஒரு நாள் நீல வரிப்போட்ட அவனின் மகனுடைய படம் வீட்டுக்கு வந்த போது நீலக்கடலும், மயிலின் நிறங்களும் மறைந்து போயின. ஒருநாள் மட்டும் கனவாய் வந்துபோயின.

விடுபட முடியா வேதனைகள் இதயத்தின் குருதிக்குழாய்களில் குண்டூசிகள் பாய்ச்சின. அவனின் நேசிப்புக்குரிய மயில்நீலநிறம், இரத்த சிவப்பாக மாறி மனவெளிப் பாலைவன மொன்றின் காங்கையின் நடுவே நிறுத்தியது.

கால நகர்வின் கடுமணலில் அவன் கால்கள் பதித்துச் சென்று கொண்டிருந்தபோதுதான் அந்தசெய்தி அவனை வந்தடைந்தது. தமிழரின் கடற்பரப்பில் போராளிகளின் தாக்குதலில் உலங்குவானூர்தி வெடித்துச் சிதறியது என்று. அப்பொழுதுதான் அவனின் மனவெளி நீலம் பாரிக்கத் தொடங்கியது. இனி நீலமாக மாற்றம் கண்டு, மயிலின் நினைவாகவோ, அன்றி மகனின் நீல வரியின் நினைவாகவே, அவனின் ஆத்மாவின் வேண்டுகைக்குரிய நீலமயில், அவனைச் சுற்றி விரியும் பிரபஞ்சத்தில் தோற்றம் கொள்ளும். ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவைக் குணமாக்கும் நாவற்பழம்



நாவல் பழத்தின் தாயகம் இந்தியா. இப்போது வெப்பமண்டலப் பகுதிகள் அனைத்திலும் மழைக்காலத்தில் நாவல் பழம் நன்கு கிடைக்கிறது.

நாவல் பழத்தில் இரு வகைகள் உள்ளன. ஒன்று உருண்டை ரசம், இன்னொன்று நீள இரகம். இவற்றுள் நீள வழிவில் பெரியதாய் இருக்கும் பழவகையில்தான் இனிப்புச் சுவை அதிகம்.

பெரும்பாலான பழங்களை அப்படியேதான் உள்கொள்ள வேண்டும். நாவற்பழங்களை மட்டும் சிறிதளவு உப்புச் சேர்த்து சாப்பிட்டால் ருசி அதிகரிக்கும். கல்லீரலும் செரிமான உறுப்புகளும் நன்றாய் இயங்க பண்டைய மருத்துவரான சரகர் என்பவர் நாவல் பழத்தை சாப்பிடச் சொல்லியிருக்கிறார்.

ஆண்டின் சில மாதங்கள் மட்டுமே கிடைக்கும் நாவல் பழத்தில் நீரிழிவு நோயைக் குணப்படுத்தும் மருந்துப் பொருள்கள் உள்ளன. கணைய நீர்ச்சுரப்பிகளை இப்பழத்தில் உள்ள மருந்துகள் அதிகம் தொடர்பு கொண்டு அதனால் நீரிழிவு குணமாகிறது.

உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும் இப்பழத்தில் கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்து, வைட்டமின் சி, பி ஆகிய தாது உப்புகளும் வைட்டமின்களும் உள்ளன. புரதச்சத்து 0.7%ம், மாவுச்சத்து 14%ம் இப்பழத்தில் உள்ளன.

## சிறுநீரில் சர்க்கரையின் அளவு குறைய

நாவல் பழத்தின் விதைகளைக் காய வைத்து இடித்துப் பொடியாக வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு தடவைக்கு 3 கிராம் வீதம் நான்கு வேளைகள் தண்ணீரில் கலந்து இந்தத் தூளை உட்கொண்டால் சிறுநீரில் சர்க்கரையின் அளவு குறையும்.

மூலத் தொந்தரவு உள்ளவர்கள் வாழ்நாள் முழுவதும் அந்தொந்தரவிலிருந்து விடுபட நாவல் பழம் கைகொடுத்து உதவுகிறது. பழம் அதிகம் விளையும் காலத்தில் தினசரி இரண்டு அல்லது மூன்று பழங்களை உப்புச் சேர்த்து அல்லது தேன் சேர்த்து காலையில் சாப்பிட வேண்டும். இப்படி தொடர்ந்து மூன்று மாதங்கள் வரைச் சாப்பிட்டால் மூல நோய் முற்றிலும் குணமாகும். அடுத்த பழம் அதிகம் விளையும் காலத்தில் விரும்பினால், இதே முறைப்படி நாவல் பழத்தை உட்கொள்ளலாம்.

## வயிற்றுப் போக்கு இனி இல்லை!

சாதாரண பேசி, சீதள பேதி முதலிய தொல்லைகளையும் இப்பழம் கட்டுப்படுத்தும். இப்பழத்தின் விதைகளைக் காயவைத்து, உடைத்து, அரைத்து மாவாக்க வேண்டும். பின்பு இதை பத்து கிராம் வீதம் மோருடன் சாப்பிட்டால் வயிற்றுக்கடுப்பும், வயிற்றுப் போக்கும் கட்டுப்படும்.

ஆயுற்வேத மருத்துவத்தில் நீரிழிவு நோயாளிகள் குணம் பெற பின்வருமாறு செய்ய வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. மரத்தின் பட்டைகளை எரித்துச் சாம்பல் ஆக்க வேண்டும். அந்த வெள்ளை நிறச்சாம்பலை இடித்து பொடியாக்க வேண்டும். அப்பொடியில் அரை தேக்கரண்டி எடுத்து காலையில் வெறும் வயிற்றில் தண்ணீருடன் சேர்த்து அருந்த வேண்டும். பிறகு, இரவு உணவிற்குப் பிறகு இந்தத் தூளை ஒரு தேக்கரண்டி வீதம் அருந்த வேண்டும். இப்படி அருந்தினால் நீரிழிவு குறையும். பிறகு தூளின் அளவை நாளுக்கு நாள் கொஞ்சம் கொஞ்சமாக குறைக்க வேண்டும்.

சிலருக்கு அடிக்கடி சிறு நீர் வெளியாகிக் கொண்டிருக்கும். அவர்கள் நாவல் பழத்தின் விதைகளை இடித்து எடுக்கப்பட்ட தூளைத் தினைமும் ஒரு கிராம் வீதம் காலையிலும், மாலையிலும் தண்ணீருடன் கலந்து உட்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தால் அதிகமாக சிறுநீர்ப் போவது குறையும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழச்சாறாய் உட்கொள்ளுங்கள்

நீரிழிவு நோயாளிகள் சர்க்கரையின் சதவிகிதத்தை பதினைந்து நாட்களில் பத்து சதவிகிதம் வரை குறைத்துவிடலாம். மூன்று மாதத்திற்குள் நோயை முற்றிலும் குணப்படுத்தி விடலாம். இந்த முறையில் குணப்படுத்த நாவல் பழச்சாற்றை தினமும் மூன்று வேளை தவறாமல் உட்கொள்ள வேண்டும்.

நாவல் பழம், பித்தத்தைத் தணிக்கும், மலச்சிக்கலைக் குணப்படுத்தும்.

நாவல் பழச்சாறு அடிவயிற்றில் ஏற்படும் திருகு வலியை குணமாக்கும். இதயத்தை சீராக இயங்கச் செய்யும். இரத்த சோகை நோயைக் குணப்படுத்தும். சிறுநீரகத்தில் ஏற்படும் வலியையும் முற்றிலும் குணப்படுத்தும்.

## தொழுநோயா?

சிறுநீரகக் கற்கள் கரையவும், இரத்தம் சுத்தமாகி தொழுநோய் முற்றிலும் குணமாகவும், நாவல் பழச்சாறு பயன்படுகிறது. மனத்தின் ஊக்கமின்மையைப் போக்குகிறது. மண்ணீரல் கோளாறுகளைச் சரி செய்கிறது.

பழச்சாறு தயாரிக்க நீள வடிவில் பெரியதாக இருக்கும் பழவகையைத்தான் பயன்படுத்த வேண்டும்.

## அளவோடு சாப்பிட வேண்டும்!

நாவல் பழத்தை குழந்தைகள் உட்பட அனைத்து வயதினரும் அளவுடன்தான் பயன்படுத்த வேண்டும். அளவுக்கு அதிகமாய் சாப்பிட்டால் இருமல் ஏற்படும். சிலருக்குத் தொண்டைக் கட்டிக் கொள்ளும்.

## வெறும் வயிற்றில் சாப்பிடாதீர்கள்

வெறும் வயிற்றில் பழத்தையோ பழச்சாற்றையோ சாப்பிடக்கூடாது. நாவல் பழம் சாப்பிடுவதற்கு மூன்று மணி நேரத்திற்கு முன்பாக பால் அருந்தக் கூடாது. இப்பழத்தை சாப்பிட்ட பிறகு மூன்று மணி நேரம் கழித்துத்தான் பால் அருந்த வேண்டும்.

## பெண்களின் மலட்டுத் தன்மை குணமாகும்!

பெண்கள் தங்களின் மலட்டுத் தன்மையை நீக்கிக் கொள்ள வைட்டமின் ஈ தேவை. இந்த மரத்தின் இலைச்சாற்றை கஷாயமாக்கித் தேன் அல்லது வெண்ணெய் கலந்து சாப்பிட்டால், மலட்டுத் தன்மை அகலும். கருச்சிதைவு ஏற்படுவதையும் தடுத்துக் கொள்ள முடியும். ஆண்கள் இந்த முறையில் இலைக்கஷாயத்தைச் சாப்பிட்டால், இதயத் துடிப்பை வைட்டமின் ஈ ஒழுங்குப் படுத்தி விடும். மருந்தைப் போல் பயன்படுத்தி உடல் ஆரோக்கியம் பெற வேண்டிய பழம் இது. ●

**நம்பிக்கை மூலை**

சுய முன்னேற்றச் சிந்தனையாளர் ஒருவர் உரையாற்றிக் கொண்டிருந்தார். அவருடைய கைகளில் ஆயிரம் ரூபாய் நோட்டொன்று! ''இது யாருக்கு வேண்டும்?'' கேட்டதும் அனைவரும் கை உயர்த்தினார்கள்.

''கொஞ்சம் இருங்கள்'' என்று சொல்லிவிட்டு அதை நன்றாக கசக்கினார். ''இப்போது இது யாருக்கு வேண்டும்?'' அனைவர் கைகளும் மீண்டும் உயர்ந்தன. காலில் போட்டு நன்றாக மிதித்தார். அழுக்கும் புழுதியும் அப்பிக் கொண்டன. ''இன்னும் இது வேண்டுமா உங்களுக்கு?'' அனைவர் கைகளும் உயர்ந்தன.

பேச்சாளர் சொன்னார், ''நண்பர்களே! கசக்கினாலும், மிதித்தாலும் இதன் மதிப்பு குறையாது. சில நேரங்களில் வாழ்க்கை உங்களை இப்படித்தான் கசக்குகிறது. காலில் போட்டு மிதிக்கிறது. உடனே நீங்கள் உங்கள் மதிப்பு குறைந்து விட்டதாகக் கவலைப் படாதீர்கள். உங்கள் நம்பிக்கையை இழக்காதீர்கள்!'' உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள்.

துணிவு நிரந்தரமானால் தோல்வி நிரந்தரமல்ல.



தமிழர் தகவலின் கருத்துக்கு வலுசேர்க்கும் மற்றொரு ஆதாரம். தியாகராஜ நகர் உஸ்மான் தெரு மேம்பாலம் திறப்பு விழாவின் போது கலைஞர் அவர்கள் தியாகராஜ நகரை தி. நகர் என்று அழைப்பது முற்றிலும் தவறானது. தியாயகராஜ நகர் என்றே அதனை அழைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புரட்டாசி மாத பலன் (செப்டெம்பர் 15 - அக்டோபர் 15)


## கணித்தவர் : ஜோதிட ரத்னா – லயன். டாக்டர். கே.பி. வித்யாதரன்

37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை – 17. தொலைபேசி : 2434 8877, 24336465


**மேடம்** தன்மானச் சிங்கங்களே! 10-ந் தேதி முதல் உங்கள் ராசிநாதன் சுக்ரனுடன் சேர்வதால் எதிர்பாராத பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, கௌரவப் பதவிகள் உண்டு. தொண்டைவலி, மூட்டுவலி குறையும், சகோதரங்களுக்கிடையே இருந்த கசப்பு நீங்கும். மனைவி வழியில் உதவி உண்டு. பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். ஏற்றுமதி, இறக்குமதி வகைகள் ஆதாயம் தரும். நல்ல வேலைகள் கிடைக்கும். உத்யோகத்தில் போட்டிகள் விலகும். உற்சாகமான மாதமிது.

**இடபம்** இனிமையானவர்களே! தன, பூர்வ புண்யாதிபதி புதன் தொடர்ந்து வலுப் பெற்றிருப்பதால் புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். தரவேண்டிய பணத்தை தந்து முடிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். கணவன் - மனைவிக்குள் மனம் விட்டுப்பேசுவீர்கள். பெண்ணுக்கு எதிர்பார்த்தபடி நல்ல வரன் அமையும். மறைமுகப்போட்டிகளை வெல்வீர்கள். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத்தீரும். போட்டியாளர்களை தவிடுபொடி யாக்குவீர்கள். திறமையால் வெற்றி பெறும் மாதமிது.

**மிதுனம்** தன்னம்பிக்கையுடையவர்களே! உங்களின் பிரபல யோகாதிபதி சுக்ரன் ஆட்சி பெற்றிருப்பதால் புது முயற்சிகள் வெற்றியடையும். குடும்பத்தில் உங்களின் ஆலோசனைகளை ஏற்பார்கள். கடன்பிரச்சனைகளுக்கு புதுவழி பிறக்கும். பிள்ளைகளின் உடல்நலம் திருப்தி தரும். உடன்பிறந்தவர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். முன்கோபம், டென்ஷன் குறையும். வியாபாரத்தில் போட்டிகளை முறியடிப்பீர்கள். கொடுக்கல் - வாங்கல் சுமுகமாக இருக்கும். உத்யோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். ஏற்றம் நிறைந்த மாதமிது.

**கடகம்** கூடிவாழும் குணமுடையவர்களே! சுகாதிபதி சுக்ரன் ஆட்சிப் பெற்றிருப்பதால் தாயாரின் உடல்நலம் சீராகும். வாகனச் சேர்க்கையுண்டு. ஆடம்பரச்செலவுகளை குறைப்பீர்கள். குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு மதிப்பு கூடும். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். தள்ளிப்போன காரியங்கள் உடனே முடியும். தாராளமாக பணம் வரும். வி.ஐ.பிகள் உதவுவார்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பு தருவார்கள். புது ஏஜென்ஸி எடுப்பீர்கள். உத்யோகத்தில் உங்களின் திறமை வெளிப்படும். தடைகள் உடைபடும் மாதமிது.

**சிம்மம்** உற்சாகமானவர்களே! பிரகஸ்பதியான குரு தொடர்ந்து உங்களுக்கு ஆதரவாக இருப்பதால் வி.ஐ.பிகள் உதவுவார்கள். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். உங்களின் நெடுநாள் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும். பணப்பற்றாக்குறை அகலும். குடும்பத்தாரின் மனதைப் புரிந்து கொள்வீர்கள். சகோதரவகையில் வீண் டென்ஷன் வந்துபோகும். குழந்தைபாக்யம் உண்டாகும். கன்னிப் பெண்களுக்கு காதல் விவகாரம் சுமுகமாக முடியும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் வருகை தருவார்கள். உத்யோகத்தில் தொல்லைகள் அகலும். நல்லது கெட்டது நான்கையும் உணரும் மாதமிது.

**கன்னி** மனசாட்சியுள்ளவர்களே! புரட்டாசி 10-ந் தேதி முதல் உங்கள் ராசியை விட்டு செவ்வாய் விலகுவதால் படபடப்பு, முன் கோபம் விலகும். முயன்றும் முடியாமல் போன பணிகளையெல்லாம் இந்த மாதத்தில் முடித்துக் காட்டுவீர்கள். வரவுக்கு மீறிய செலவு இருந்ததே! இனி பக்குவமாக செலவு பண்ணுவீர்கள். கணவன் - மனைவிக்குள் இருந்த சண்டை சச்சரவுகள் விலகி பரஸ்பரம் புரிந்து கொள்வார்கள். வியாபாரத்தில் உணவு, கம்ப்யூட்டர் உதிரிபாகங்களால் ஆதாயம் உண்டு. உத்யோகத்தில் மகிழ்ச்சி தங்கும். வேலைசுமை வாட்டியெடுக்கத் தான் செய்யும். சிந்தித்து செயல்படும் மாதமிது.

**துலாம்** அமைதியானவர்களே! உங்கள் ராசிநாதன் சொந்த வீட்டில் அமர்வதால் செல்வாக்கு கூடும். காரியத் தடைகள் விலகும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். பிள்ளைகளின் வெகுநாள் ஆசைகளை பூர்த்தி செய்வீர்கள். பழைய கடன் ஒன்றை பைசல் செய்வீர்கள். உடன்பிறந்தவர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் மறைமுகமாக செயல்பட்டவர்களை ஒதுக்கித் தள்ளுவீர்கள். உத்யோகத்தில் பதவி உயரும். புது சலுகைகள் கிடைக்கும். மனநிறைவான மாதமிது.

**விருச்சிகம்** அதிரடியாக யோசிப்பவர்களே! 2-ல் குரு இருப்பதால் தடைகள் உடைபடும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகளின் உடல்நலத்தில் கொஞ்சம் கவனம் செலுத்துங்கள். வேற்று மொழியினரால் ஆதாயம் பெறுவீர்கள். சொந்தம் பந்தங்களின் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். வீட்டிற்குத் தேவையானப் பொருட்களை வாங்குவீர்கள். ஷேர், லாட்டரி மூலம் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிப்பீர்கள். உத்யோகத்தில் புது வேலை கிடைக்கும். மனநிம்மதி கிட்டும் மாதமிது.

**தனுசு** மனதில் பட்டதை பளிச்சென்று பேசுபவர்களே! எதிர்பாராத பணவரவு உண்டு. குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடக்கும். புது நகை வாங்குவீர்கள். பழைய கடன் தீரும். வாகனத் தொல்லை நீங்கும். வி.ஐ.பிகள் அறிமுகமாவார்கள். பிள்ளைகளின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். கௌரவப் பதவிகள் தேடி வரும். உடன்பிறந்தோர் உறுதுணையாக இருப்பார்கள். வியாபாரத்தில் தன லாபம் உண்டு. புது ஏஜென்சி எடுப்பீர்கள். உத்யோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். சாதிக்கும் மாதமிது.

**மகரம்** கடின உழைப்பாளிகளே! உங்களில் பிரபல யோகாதிபதி சுக்ரன் சொந்த வீட்டில் ஆட்சிப் பெற்றிருப்பதால் இந்த மாதத்தில் கொஞ்சம் பணம் வரும். காரியங்கள் இழுபறியாக இருந்தாலும் முழுமூச்சுடன் முடித்துக் காட்டுவீர்கள். வீண் அலைச்சலும், மன உளைச்சலும் குறையும். பிள்ளைகளால் உறவினர்கள் மத்தியில் பெருமையடைவீர்கள். சுபகாரிய பேச்சு வார்த்தைகள் முன்னேற்றம் தரும். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புது முதலீடுகளை தவிர்க்கவும். உத்யோகத்தில் மறைமுகமாக செயல்பட்டவர்களை ஒதுக்குவீர்கள். பொறுத்திருந்து சாதிக்கும் மாதமிது.

**கும்பம்** ஆன்மீகவாதிகளே! உங்களின் சுக, பாக்யாதிபதியான சுக்ரன் சொந்த வீட்டில் நிற்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். நினைத்தது நிறைவேறும். மகிழ்ச்சியான செய்திகள் தேடி வரும். கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். சகோதர வகையில் மகிழ்ச்சியுண்டு. கன்னிப் பெண்களுக்கு காதல் இனிக்கும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். மகான்கள், கல்வியாளர்களின் நட்பு கிட்டும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்யோகத்தில் திறமைகள் வெளிப்படும். மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள். தொட்டதெல்லாம் துலங்கும் மாதமிது.

**மீனம்** எதிரிக்கும் உதவுபவர்களே! 7-ல் புதன் உச்சம் பெற்று மறைந்திருப்பதால் திறமைகள் வெளிப்படும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பிள்ளைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள். சகோதர வகையில் மகிழ்ச்சியுண்டு. அரசு பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உறவினர்கள் மத்தியில் மதிக்கப் படுவீர்கள். சனியால் சோர்வு நீங்கும். கன்னிப்பெண்களுக்கு உடல்நிலை சீராக இருக்கும். வியாபரத்தில் மறைமுகப் போட்டிகளை சமாளிப்பீர் கள். பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்யோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். தன்னம்பிக்கை துளிர்விடும் மாதமிது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவஸ்ரீ பிச்சைக்குருக்கள்
அவர்களுடன்
லண்டன் பிரமுகர்கள்



2008 நெல்லை தீபத்தில்
ராகினி ராஜகோபாலின்
மாணவிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் முதலாக திரைப்படத்தில்...

இரா உமா




இந்த சமூகம் அவர்களை விலக்கி வைத்து வேடிக்கைப் பொருளாக்கிவிட்டது. தங்களது உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத இச்சமூகத்திலிருந்து அவர்களும் ஏனோ விலகியே இருக்க வேண்டியதாயிற்று. இயற்கை இழைத்த குற்றத்திற்கு இவர்களுக்கு ஆயுள் தண்டனை.

மரண வேதனையை விடக் கொடுமையானது எது தெரியுமா? தான் வாழ்கின்ற சமூகத்தின் உதாசீனமும், புறக்கணிப்பும்தான். அப்படிச் சமூகத்தின் உதாசீனத்திற்கும், புறக்கணிப்புக்கும் ஆளான அவர்கள் கடுஞ்செயல்கள் புரிந்தவர்களல்லர். கருவில் உண்டான மரபணு மாற்றத்தால் உருவில் மாறியவர்கள் திருநங்கைகள்.

ஆணும், பெண்ணும் இணைந்த உருவமான லிங்கத்தையும் அர்த்தநாரீஸ்வரரையும் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்ளும் இச்சமூகம் இவர்களிடம் மட்டும் தீண்டாமையைக் கடைப்பிடிப்பது எந்தவிதத்திலும் நியாயமில்லை.

நியாயங்களும், தீர்ப்புகளும் காலச்சூழலுக்கு ஏற்ப மாறிக் கொண்டுதான் வந்துள்ளன. அதே சமயத்தில் எந்த ஒன்றும் தானாகவே மாறிவிடவில்லை. மாறியும் விடாது. மாற்றுவதற்கான முயற்சிகளை யாராவது சிலர் முன்னெடுக்கும் போதுதான் நல்ல மாற்றங்கள் உண்டாகும். அப்படித்தான் திருநங்கைகளைப் பற்றிய சமூகத்தின் தவறான கண்ணோட்டத்தை மாற்ற, அரசாங்கம் உட்பட ஆங்காங்கே பலர் பலவிதங்களிலும் முயற்சித்து வருகின்றனர்.

அந்த வகையில் இயக்குனர் சிவகுமார், சக்திவாய்ந்த காட்சி ஊடகமான திரைப்படத்தை மாற்றத்திற்கான ஒரு கருவியாகக் கையில் எடுத்திருக்கிறார்.

திரைப்படங்களில், கேலிக்குரியவர்களாகவும், பாலியல் தொழிலாளியாகவும்தான் இதுவரை திருநங்கைகள் சித்தரிக்கப்பட்டுள்ளனர். மிகச் சில படங்கள் கொஞ்சம் விதிவிலக்காக இருந்திருக்கலாம். ஆனால் அவைகளும்கூட திருநங்கைகள் எதிர் கொள்கின்ற பிரச்சினைகள், உளவியல் சிக்கல்கள், போன்றவற்றைப் பற்றிப் பேசவில்லை.

இயக்குனர் சிவகுமாரின் முதல் படமே அதைப்பற்றித்தான் பேசுகிறது. பால்(இனம்) ரீதியாகப் பாதிக்கப் பட்டவர்களின் படமென்பதாலோ, என்னவோ படத்தின் பெயரோ ''பால்''.

இன்பமானாலும், துன்ப மானாலும் அதை அனுபவிப்பவர்களால் தானே அந்த உணர்வுகளைத் துல்லியமாக வெளிப்படுத்த முடியும். அதனால்தான் திருநங்கைகளின் ''வலியை'' வெளிப் படுத்த ஒரு திருநங்கையையே இப் படத்தின் கதாநாயகியாக்கி இருக்கிறார் இயக்குனர் சிவகுமார்.

கதாநாயகி ஐஸ்வர்யா திரைப்படத் திற்காக கற்பகாவாகியிருக்கிறார். தோற்றத்தை வைத்து திருநங்கை என்று சொல்லிவிட முடியாதபடி இருக்கும் அழகான பெண். அடுத்து பாராட்டுகளோடு அறிமுகப்படுத்தப்பட வேண்டியவர் இப்படத்தின் கதாநாயகன் 'காதல்' கந்தாஸ். காரணம் நடன இயக்குனரான இவர் கதாநாயகனாக அறிமுகமாகும் முதல் படம் இதுதான்.

ஊடகத்துறையில் வேலை செய்யும் நாயகி தான் ஒரு திருநங்கை என்பதை வெளிப்படுத்திக் கொள்ள விரும்பாதவர். வேலை தேடிக் கொண்டிருக்கும் கதா நாயகிக்கும், அவனது நண்பர்களுக்கும் தான் இருக்கும் ஊடகத்துறையில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கிறார். அங்கு மொட்டுவிடுகிறது காதல். இருவழிக் காதலாக இருந்தும் தன் காதலை வெளிப்படுத்தத் தயங்கும் கதாநாயகி தன் காதலை ஒருதலைக் காதலாக்கி, தன் காதலுக்கு முடிவுரை எழுதி விடுகிறார். இந்நிலையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் Tamil House-இல்
மார்க்கண்டன் Solicitors

**MARKENDAN &**
**UDDIN SOLICITORS**

Solicitors & Administrators for Oaths

We Specialise in
For all your needs in immigration
(All aspects upto house of lords)
Commercial & Residential
Conveyancing, Employment,
Civil Litigation, Consumer Problems,
Lastwill, Power of Attorney,
Sponsorship Declaration
HSMP, Workpermits

Tamil House, 720 Romford Road
London E12 6BT
Tel : 020 8514 8300, 07830 285 634
Fax : 020 8514 8381
Email : info@msssolicitors.com

Mr. Markandan : 07956 386 578
Mr. Uddin : 07957 455 670

**எவரஸ்ட்**
Curry King

**24 Loampit Hall**
**Lewisham SE13 7SW**
**Tel : 020 8691 2233**



அசத்தலான
அசைவ
சுவைக்கு

Breakfast Lunch Dinner

வெம்பிளியில் இன உணர்வான மளிகை கடை

**MALAR**
Supermarket

543- High Road
Wembley Middlesex, Hao 2 DJ
**Tel : 020 8795 5797**

உங்கள் சகல தேவைகளையும்
பூர்த்தி செய்கிறது

24 மணி நேர சேவையில் ஒரு மளிகை கடை

**மலர்**
**சூப்பர் மார்க்கெட்**

லண்டனில் பொற்கை வண்ணர்களின்
நிர்வாகத்தில்இயங்கும் ஒரே நகை மாடம்

**mierra**
Jewellery Mart
*Gems & Jewellery*



34 London Road, Tooting
London SW 17 9HP
**Tel : 020 8648 7750**
Mobile : 07958948685
www.meera_jewellery.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதாநாயகனின் காதல் என்னவாயிற்று என்பதுதான் படத்தின் உச்சக்கட்டம். படத்தின் இன்னொரு கதாநாயகியாக பிரபலமான நடிகை ஒருவர் நடிப்பார் எனத் தெரிகிறது.

நகைச்சுவைக்கு மயில்சாமியும், கருணாசும். முக்கியமான வேடங்களில் ரேவதி, கலைராணி, ஜி.எம்.குமார் ஆகியோர் நடிக்கின்றனர். இப்படத்தின் படப்பிடிப்பு தளங்களாக சென்னை மற்றும் தேனி மாவட்டம் பகுதிகளைத் தேர்ந்தெடுத்திருப்பதாகத் தெரிவித்தார் இயக்குனர்.

ஒளிப்பதிவு ஆர். மகேந்திரன், இசை பிரியதர்சன். உதவி இயக்குனர்கள் சேரன், லிவிங்ஸ்மைல் வித்யா. பாடல்கள் விஜயசாகர், நந்தலாலா, ஆண்டாள் பிரியதர்ஷிணி. எடிட்டிங் படத்தொகுப்பு லெனின்.

இப்படிப்பட்ட நல்ல முயற்சிகள் வெற்றியடைய வேண்டும். திருநங்கையான கதாநாயகியை, ஊடகத்துறையில் வேலை செய்யும் ஆளுமை மிக்க பெண்ணாகச் சித்தரித்துள்ள இயக்குனர் சிவகுமாரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

படம் வெற்றியடைய நமது வாழ்த்துக்கள்

இயக்குனர்



1. படத்தின் 'கரு' என்ன?

இது திருநங்கைகளைப் பற்றிய முழு நீளத் திரைப்படம். மற்ற படங்களில் இருப்பது போன்ற, குத்துப்பாடல்கள், நகைச்சுவை, சென்டிமென்ட், சண்டைக்காட்சிகள் அனைத்தும் இதிலும் உண்டு. முதலில் திருநங்கைகளை அவர்களது குடும்பத்தினர் அங்கீகரிக்க வேண்டும் என்பதுதான் இப்படத்தின் கருவாக அமைந்துள்ளது.

2. முதல் படமே திருநங்கைகளைப் பற்றி எடுப்பதற்கு என்ன காரணம்?

ஒரு சமயம் கோயிலுக்குள் சாமி கும்பிடச் சென்ற திருநங்கை ஒருவரை, அங்குள்ள பெரியவர்கள் வெளியில் பிடித்துத் தள்ளியதைப் பார்த்தேன். மிகவும் வேதனையாக இருந்தது. அவர்களைப் பற்றி பதிவு செய்ய விரும்பினேன். எனக்குத் தெரிந்தது சினிமா. இதையே அதற்கான வழியாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டேன்.

நீங்கள் பார்த்த நிகழ்வு உங்களைப் பாதித்தது சரி உங்கள் குழுவினர் எப்படி ஏற்றுக் கொண்டார்கள்?

திருநங்கைகளைப் பற்றி நிறைய தெரிந்து கொண்ட பிறகுதான் படம் பண்ணும் முடிவுக்கு வந்தேன். நான் படித்தும், நேரிலும் தெரிந்து கொண்டவற்றை என் குழுவினருக்குப் பொறுமையாக விளக்கிச் சொல்லிப் புரிய வைத்தேன். இப்பொழுது என்னைவிட, எனது குழுவினர் பல மடங்கு உணர்வோடும் உற்சாகத்தோடும் பணியாற்றுகின்றனர். அதேபோல் என்னுடைய சிறப்பான பாராட்டுக்குரிய நபர் கதாநாயகன் 'காதல்' கந்தாஸ் தனது யதார்த்தமான நடிப்பாலும், எங்களுக்கு ஊக்கமளித்து வருகிறார்.

திருநங்கையை திரையில் ஒரு சராசரிப் பெண்ணாகக் காட்டுவதில் ஏதேனும் சிக்கல்கள் இருக்கிறதா?

ஆம். இருக்கிறது. மிகுதியான பெண் தன்மை காரணமாக அவர்களுடைய உடல் மொழியான அதிகப்படியான நளினத்தோடு இருப்பது இயற்கை. அதைத் தவிர்த்து, இயல்பான நடிப்பைக் கொண்டுவர கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. கதாநாயகி கற்பகாவும் நல்ல ஒத்துழைப்பு தருகிறார். ஒவ்வொரு அங்குலத்தையும் மிக கவனத்துடன் செதுக்கிக் கொண்டுள்ளோம். விரைவில் படம் வெளிவரும்.

காதல் கந்தாஸ்




1. இந்தப் படத்தில் நடிப்பதற்கு ஒத்துக் கொண்டதற்கு காரணங்கள் ஏதாவது உண்டா?

சிறப்பான காரணம் கதைதான். கதையும் இயக்குனரும் தான் இப் படத்தின் கதாநாயகர்கள். கதையின் வித்தியாசமான முடிவு என்னை மிகவும் கவர்ந்ததும் ஒரு காரணம்.

2. உங்கள் குடும்பத் தினர், உறவினர்கள் மத்தியி லிருந்து எப்படிப்பட்ட வரவேற்புக் கிடைத்தது?

நேர்மறையான வரவேற்புதான் கிடைத்தது. எனது சகோதரிகள் இருவருமே ''இது ஒரு நல்ல வாய்ப்பு. சரியாகப் பயன்படுத்திக் கொள்'' என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்தினார்கள். நடன இயக்குனர் பிரபுதேவா அவர்கள் தொலைபேசியில் அழைத்து, வாழ்த்தியது மிகவும் ஊக்கப்படுத்தியது.

3. இயக்குனர், கதாநாயகிப் பற்றி

எனக்கு ஏற்ற கதையை முதல் படத்திலேயே எனக்குக் கொடுத்த சிவகுமார் சாருக்கு முதலில் நன்றி சொல்ல வேண்டும். துடிப்பான இயக்குனர். மற்றவர்களின் ஆலோசனைகளுக்கும் செவி சாய்க்கும் உன்னதமான மனம் படைத்தவர்.

கதாநாயகி அமைதியான சுபாவமுடையவர். நாகரீகமாள அணுகுமுறையைக் கொண்டவர். யூனிட்டில் அனைவருடனும் நட்பு பாராட்டுபவர்.

கற்பகா

1. இந்தப் பட வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்ததைப் பற்றிக் கூறுங்கள்?

எனக்குக் கிடைத்த நல்ல வாய்ப்பு இது. முதலில் நிறைய பயமும், தயக்கமும் இருந்தது. என்னால் நடிக்க முடியுமா என்கிற பயம். வழக்கம்போல், எங்களை இழிவாகக் காட்டுவார்களோ என்கிற தயக்கம். இயக்குனர் என்னிடம் முழுக்கதையையும் சொல்லி புரிய வைத்த பிறகுதான் ஒத்துக் கொண்டேன்.




2. படப்பிடிப்பில் மற்றவர்கள் உங்களிடம் எப்படி நடந்து கொள்கிறார்கள்?

எங்கள் படக்குழுவினர் அனைவருமே மிகவும் மரியாதையாக நடந்து கொள்கிறார்கள். பாண்டிச்சேரியில் ஒரு வாரம் நடிப்புப் பயிற்சி கொடுத்தார்கள். அதில் கலந்து கொண்ட பெண்கள் என்னிடம் பேசவும், பழகவும் எந்தவித தயக்கமும் இன்றி ஆர்வத்துடன் வந்ததைப் பார்த்து எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

3. உங்கள் குடும்பம் பற்றிச் சொல்லுங்கள்?

சொந்த ஊர் ஈரோடு. என்னுடன் பிறந்தது ஒரு தங்கை மட்டும்தான். என் பெற்றோர்கள் எப்போதுமே என்னை புறக்கணித்ததில்லை. அவர்களின் ஆதரவு எப்போதுமே எனக்கு உள்ளது. என் போன்று உள்ளவர்க்கு ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். தனிமைப்பட்டு நிற்காமல் எதிர்நீச்சல் போட்டு அனைவரோடும் இணைந்து பயணம் செய்வது ஒன்றுதான் இந்தச் சமூகம் நம்மை அங்கீகரிக்கச் செய்வதற்கான வழி என்று நினைக்கிறேன். ●



**மாதமிரு திருக்குறள் கற்போம்**

## இன்னா செய்யாமை

***பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா***
***பிற்பகல் தாமே வரும்.*** ***(குறள் 319)***

பிறருக்கு முற்பகலில் துன்பம் செய்தால் அவ்வாறு செய்தவருக்கே பிற்பகலில் துன்பம் தாமாகவே வந்து சேரும்.

***நோய்எல்லாம் நோய் செய்தார் மேலவாம் நோய்செய்யார்***
***நோயின்மை வேண்டு பவர்.*** ***(குறள் 320)***

துன்பம் எல்லாம் துன்பம் செய்தவரையே சார்வனவாகும்; ஆகையால் துன்பம் இல்லாமல் வாழ விரும்புகின்றவர், பிறருக்கு துன்பம் செய்யார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ayngaran *International*




30 High Street, Collierswood
London SW 19 2AB
UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 540 1500
Fax : 00 44 (0) 208 543 8400
Email : shop@ayngaran.com

Unit 19, Riverside Business Park
Lyon Road, Wimbledn
London SW19 2RL
UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 543 4477
Fax : 00 44 (0) 208 543 4466
Email : sales@ayngaran.com

367 High Street North
East Ham
London E12 6PG
UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 471 3111
00 44 (0) 208 471 3133

ஐங்கரன்
தொலைக்காட்சியில்
கலைஞர்
தொலைக்காட்சி
தற்போது
இலவசமாக
காண்பிக்கப்படுகிறது

Ayngaran நான்காவது கிளை

11-13 Ealing Road Wembley Middlesex HAO 4AA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மை கொள்

# சைவ நீதி



மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம் என்ற இந்த பாடலைக் கேட்கும் போது எப்படி இது சாத்தியமாகும் என்று நினைத்ததுண்டு. ஆனால் இன்று உலகம் முழுவதும் சைவமும் சைவக் கோயில்களும் வளர்ந்து விட்ட நிலையில் உண்மையான சைவ சமய வழிபாடுகள் நடைபெறவில்லை என்பதுதான் எனது கருத்து. ஒவ்வொரு கோயில்களும் தங்களுக்கு ஏற்றவிதமாக நடந்து கொள்கிறார்களே தவிர சைவத்துக்கு சரியான வழிகாட்டியாக யாரும் அமையவில்லை. எங்கள் தேவார திருமுறைகள் மிகவும் சக்தி வாய்ந்தவை. நாங்கள் இன்று படும் முழு துன்பத்துக்கும் நல்ல வழிபாட்டின்மையே காரணம். அதற்கு எங்கள் திருமுறைகளை நன்கு மனமுருகி படித்து வந்தால் எங்கள் ஈழப் பிரச்சினை தீரும். ஆகவே இதன் கீழ் உள்ள தேவாரப் பாடல்களை முறையாக தனித்தும் கூட்டாகவும் தினமும் ஒரு வீட்டில் பாராயணம் செய்யுங்கள். இதன் பலன் உடனே கிடைக்கும் என்று உறுதியாக கூற முடியும்.

சைவ பெருமக்கள் பேரவை
லண்டன்

## திருச்சிற்றம்பலம்

1. பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடி போற்றி
வாழி திருநாவலூர் வன் தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத ஊரர் திருத்தாள் போற்றி
( நால்வர் துதி)

2. பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர் இடர்
கடி கணபதி வர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில் வலி வலமுறை இறையே
(விநாயகர் துதி)

3. தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்து ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே
(தொல்வினைகள் தொலைய)

4. மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறே
(உடல் பிணி நீங்க)


5. பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ள நினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுற வேண்டா ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குற நீர்
தோய்வினையார் அவர் தம்மைத் தோயாவாம் தீ வினையே
(பிள்ளைப் பேறு பெற)

6. உன்னிஇருபோதும் அடியேனும் அடியார்தம் இடர்ஒல்க அருளித்
துன்னியொரு நால்வருடன் ஆல்நிழல் இருந்த துணைவன் தன் இடமாம்
கன்னியரொடு ஆடவர்கள் மாமணம் விரும்பியரு மங்கலம் மிக
மின்னியனும் துண்ணிடை நன் மங்கையர் இயற்றுபதி வேதிகுடியே
(திருமணம் கைகூட)

7. இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுது எழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையே
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே
(செல்வம் பெருக)

8. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாயவே
( நிலையான நல்துணை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. நந்தி நாமம் நமச்சிவாய எனும்
சந்தையால் தமிழ்ஞான சம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்த வல்லார் எல்லாம்
பந்தபாசம் அறுக்க வல்லார்களே.
(நிலையான நல்துணை)

10. சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச் சிவாயே.
(நிலையான நல்துணை)

11. மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே
(திருக்குறுந்தொகை)

12. நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.
(திருக்குறுந்தொகை)

13. பேராயிரம் பரவி வானோர் ஏத்தும்
பெம்மானைப் பிரிவு இலா அடியார்க்கு என்றும்
வாராத செல்வம் வருவிப்பானை
மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித்
தீரா நோய் தீர்த்து அருளவல்லான்தன்னைத்
திரிபுரங்கள் தீ எழத் திண் சிலை கைக் கொண்ட
பேராணைப் புள்ளிருக்குவேளூரானைப்
போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே.
(திருத்தாண்டகம்)

14. மற்றுப் பற்றெனக் கின்றி நின் திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றாலும் பிறந்தேன் இனிப் பிற
வாத தன்மை வ ந்தெய்தினே
கற்றவர் தொழுதேத்துஞ் சீர்க் கறை
யூரிற் பாண்டிக்கொடுமுடி
நற்றவா உனை நான் மறக்கினும்
சொல்லும் நா நமச்சிவாயவே.
(கல்வி பெற)

15. நானேயோர் தவம் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானே வந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கும் அருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே
(திருவாசகம்)

16. பன்நெடுங்காலம் பணிசெய்து பழையோர் தாம்பலர்
ஏம்பலித் திருக்க
என்நெடுங் கோயில் நெஞ்சுவீற்றிருந்த எளிமையை
என்றும் நான் மறக்கேன்
மின்னெடும் புருவத்து இளமயில் அனையார்
விலங்கல்செய் நாடகசாலை
இன்நடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை இராச
ராசேச்சரத் திவர்க்கே
(திருவிசைப்பா)

17. பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று செய்தவன்
பண்ணிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே
(திருப்பல்லாண்டு)

18. சிவசிவ என்கிலர் தீ வினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிட தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே
(திருமந்திரம்)

19. கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவத்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர்பெண்பேய்
தங்கி அலறி உலறுகாட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும் வீசி
அங்கங் குளிர்ந்தனல் ஆடும் எங்கள்
அப்பன் இடந்திரு ஆலங்காடே
(காரைக்கால் அம்மையார்)

20. உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்
(பெரியபுராணம்)

21. வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்
(உலக வாழ்த்து)

**சைவத்தை வளர்ப்போம் திருமுறை ஓதுவோம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**செப்டெம்பர் 3 விநாயகர் சதுர்த்தி**

அல்லல்போம், வல்வினைபோம் அன்னை வயிற்றில் பிறந்த
தொல்லைபோம், போகா துயரம்போம் நல்ல
குணமதிக மாமருணை கோபுரத்தில் மேவும்
கணபதியை கைதொழுதற்கால்

# பயணக் கட்டுரை – 4






தமிழ்நாட்டில் ஒவ்வொரு நகரங்களுக்கிடையும் ஒரு கோயில் அமைந்து அந்தக் கோயிலைச் சுற்றி நகரம் அமைந்திருக்கும். இந்த வகையில் திருச்சியில் பிள்ளையார் கோயில், சென்னையில் கபாலீஸ்வரர் கோயில், திருநெல்வேலியில் நெல்லையப்பர் கோயில், கோயம்புத்தூரில் மருதமலை முருகன் கோயில், பழனியில் முருகன் கோயில் இப்படிச் சொல்லலாம். இதே விதமாக மதுரையில் மீனாட்சியம்மன் கோயில் நகரத்தின் நடுநாயகமாக அமைந்திருக்கிறது.


மதுரையில் நான் கண்ட மற்ற ஒரு ஆறுபடை வீடு பழமுதிர் சோலையாகும். மதுரையில் இருந்து பழமுதிர்சோலை 10 மைல் தொலைவில் உள்ளது. அழகர் கோயிலுக்கு மட்டும் வாகன வசதி உண்டு. பழமுதிர்சோலைக்கு ஒற்றையடி பாதை வழியாகத்தான் சென்று வழிபட வேண்டும். பிரமாண்டமான திருச்செந்தூர், பழனி போன்ற கோயில்களை பார்த்த நமக்கு ஆறுபடைவீடுகளில் ஒன்றான பழமுதிர் சோலையைப் பார்த்தால் வியப்புதான் உண்டாகும். ஆனால் கோயில் அமைந்திருக்கும் இடம் மிகவும் ரம்மியமான சூழலில் உள்ளது. கோயிலுக்கு மேலே ஒரு சுனை உள்ளது. அதில் எந்த நேரமும் நீராடலாம். இந்த வசதி தமிழ் நாட்டின் உள்ள வேறு எந்த கோயிலிலும் கிடையாது. இன்றைய நாட்களில் கோயில் அடிவாரத்துக்கு செல்லும் விதமாக சாலை அமைக்கப்பட்டுள்ளது.

நான் சிறு நடைபாதை வழியே மேலே ஏறிச் சென்று முருகப் பெருமானை வணங்கினேன். முருகப் பெருமான் இருக்கும் இடத்திற்குதான் பழம் உதிர் சோலை எனப் பெயர். பெயருக்கு ஏற்றவாறு செல்லும் வழி எங்கும் பழ மரங்கள் நிறைந்து காணப்பட்டது. முருகன் கோயில் ஒன்றும் அத்தனை பெரிய கோயில் என்று கூற முடியாது. ஆனால் ஆறுபடை வீட்டில் இதுவும் ஒன்று.

சிலம்பாறு இதன் அருகில் தான் ஓடிக்கொண்டிருக்கிறது. இதுவும் பெரிய ஆறு கிடையாது. சிறு கால்வாய் தான். ஆனால் இது எங்கிருந்து தோன்றி வருகிறது என அன்றும் இன்றும் கூட எவராலும் கண்டுபிடிக்கப்படவில்லை. கடும் கோடையிலும் நீர் வற்றாமல் ஓடிக் கொண்டேதான் இருக்கும்.

மதுரை மாநகரில் பழமுதிர் சோலை என்றவுடன் திருமாலின் சோலையும் நினைவுக்கு வரும். இம்மலையில் அடிவாரத்தில் அழகர் குடியிருக்கிறார். அழகர் கோயில் பெருமாளை மூலவராகக் கொண்டது. மூன்று வருடத்துக்கு ஒருமுறை எண்ணெய் சார்த்தி விடுகிறார்கள். எண்ணெய் சார்த்தியபின் அலங்காரம் செய்தால் மூன்று வருடங்களுக்கு இந்த அலங்காரம் கலைக்கப்படாமல் அப்படியே இருக்கும். 67 வாக்கில் எனக்கு இது தெரிந்திருக்கவில்லை. அதன்பின் பல தடவை சென்றபின்தான் இந்த விடயம் நமக்கு புலப்பட்டது. கள்ளழகர் கோயில் வைணவக் கோயில் மரபுப்படி கட்டப்பட்டதாகும். இத்தலம் மிகப் பழமையான புகழ் பெற்ற தொன்மையான திருத்தலமாகும். அழகர் கோயிலில் இருந்து பழமுதிர் சோலை







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ESTD 1992

# SRIKANTH & CO.

Solicitors & Property Business Centre

**Solicitors & Estate Agents**

**Property Sales, Letting & Conveyancing**

557 High Road, Wembley, Middlesex HA0 2DW

Tel : 020 8795 0648

Fax : 020 8795 0649 / Mob : 07831 195 979

We also practise in the following areas of LAW:

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing - Commercial
- Londlord & Tenant
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

# JK Gold House & Fashion House



314-316 London Road

Croydon Surrey CRO 2TJ

Tel : 020 8684 4577 Fax : 022 8684 4677

லண்டனில் **No 1** தமிழ் மொத்த வியாபாரக் கடை

# Vaani Foods

தயாரிப்பாளரிடம் இருந்து நேரடியாக

வாடிக்கையாளருக்கு

தொலைபேசி இலக்கம்

0208 668 7648





எங்கள் விளம்பரங்களை

ஐங்கரன் இலவச

தொலைக்காட்சியில்

காணத்தவறாதீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் வரையில் இராமனின் படைகள் இருபக்கமும் சூழ்ந்திருப்பது மனதுக்கு மகிழ்ச்சியூட்டும்.

இத்தலத்தில் புகழ்வாய்ந்த உற்சவம் அழகர் ஆற்றில் இறங்குவதுதான். இந்த உற்சவ வைபவம் சித்ரா பௌர்ணமி அன்று நடைபெறுகிறது. இவ்விழா உற்சவம் தொடர்ந்து ஒன்பது நாட்கள் நடைபெறும். இவ்விழாவில் நான்காவது நாள் அழகர், கள்ளழகர் திருக்கோலத்தில் புறப்பட்டுச் சென்று ஒன்பதாம் நாள் மலைக்குத் திரும்புவார்.

அழகர் மலையில் இருந்து புறப்பட்டு வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சிதான் மதுரையில் மிகப் பெரிய விழாவாக கொண்டாடப்படுகிறது. ஆற்றில் இறங்கும் கள்ளழகரை மதுரை வீரராகவப் பெருமாள் எதர்கொண்டு அழைப்பார். அழகர் கோயிலில் இருந்து புறப்படும் கள்ளழகர், மதுரை தல்லாகுளத்தில் உள்ள பெருமாள் கோயிலில் முதலில் எழுந்தருள்கிறார். மறுநாள் சித்ரா பௌர்ணமி நாளில் குதிரை வாகனத்தில் வைகையை நோக்கி செல்வார். அதற்கு முன்பு ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்து வரும் ஆண்டாள் நாச்சியாரின் மாலையை ஏற்று கொள்வார்.

இவ்விழாவை காண ஆயிரக்கணக்கான மக்கள் திரளாக கூடியிருப்பர். வைகையாற்றில் இறங்கும் அழகர், ஆற்றுவழியாக வண்டியூர் சென்று மறுநாள் சேஷ வாகனத்தில் தேனூர் மண்டபத்தில் எழுந்தருளுவார். தேனூர் மண்டபத்தில் தங்கக் கருடன் வாகனத்தில் காட்சி தருவார்.

சைவத்தையும், வைணவத்தையும் இணைக்கும் வகையில் கதை ஒன்றும் கூறுவார்கள். மதுரை மீனாட்சி அம்மனின் அண்ணன் இவர் என்றும், இவர் சென்றடைவதற்கு முன்பே மணச்சடங்கு நிறைவேறியதால் வருத்தம் அடைந்த அழகர் வைகை ஆற்றில் இறங்குவதாகவும் ஐதீகம், இது சித்திரைத் திருவிழாவின் முக்கிய அம்சம் ஆகும்.



மீனாட்சியம்மன் தேர் மாசி மாதம் நடப்பது வழக்கம். இவ் விழாவையும் அழகர் ஆற்றில் இறங்கும் விழாவையும் ஒரே நாளில் நடத்தத் திருமலை நாயக்கர் மன்னன் கட்டளையிட்டார் என கூறுவார்கள். அது முதல் சித்திரைத் திருவிழா மிக பெரிதாகிவிட்டது. அத்துடன் மீனாட்சி அம்மன் திருமணம் பார்க்க அழகர் வருகிறார் எனவும் கூறுவார்கள்.

பங்குனி உத்திரத்தில் திருக்கல்யாணம். அன்று ஸ்ரீதேவி, பூதேவி, கல்யாண சுந்தரவல்லி, ஆண்டாள் ஆகிய நால்வருடன் காட்சி தருவார். இது எந்த ஆலயத்திலும் காண முடியாத காட்சியாகும். அதுபோல ஆண்டாள் அழகர் மலையில் அமர்ந்த கோலத்தில் இருக்கிறார். இக்காட்சியும் எங்கும் காணமுடியாததாகும். அழகர் மலையின் அதிதேவதை இராக்காயி அம்மன். இந்த அம்மனுக்கு ஒவ்வொரு அமாவாசை அன்றும் சிறப்பான பூசையும் நடைபெறும்.

பழமுதிர் சோலை என்றவுடன் அழகர் வைகையாற்றில் இறங்குவதுதான் நினைவுக்கு வரும். அந்நாட்களில் பக்தர்கள் கூட்டம் திரண்டிருக்கும் காட்சியானது அற்புதமானதாகும். இந்த அழகர்பிரானின் உற்சவம் மதுரையில் மட்டுமல்ல தமிழகத்திலும் தனிப்பெரும் உற்சவமாகும்.

-தொடரும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முச்சங்கங்களையடுத்து நான்காம் சங்கம் எழுந்த வரலாறு

பாண்டிய மன்னர்கள் தமிழை நேசித்துத் தீராக் காதல் கொண்டு முச் சங்கங்கள் அமைத்து இன்பத் தமிழை வளர்த்து வந்தனர். அவர் தமிழின்பால் காட்டிய ஊக்கமும் ஆக்கமும் பல்லாயிரம் புலவர்களை உருவாக்கிக் கணக்கிலடங்கா நூல்களும் எழுந்தன. இச் சங்கங்கள் முறையே (1) தலைச் சங்கம், (2) இடைச் சங்கம், (3) கடைச் சங்கம் எனப் பெயர் பெற்றிருந்தன. இச் சங்கங்களின் ஆயுட்காலம் ஒன்பதினாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூறு (9990) ஆண்டுகளாகும். இதில் 197 பாண்டிய மன்னர்களும், 8,598 புலவர்களும் இடம் பெற்றிருந்தனர். கடைச் சங்கம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் முடிவுற்றதென்பர் ஆய்வாளர்கள். ஆகவே கி.மு. பத்தாயிரம் (10000) ஆண்டுகளிலிருந்து தமிழ் மொழி சங்கத் தமிழாக வளர்ந்து வந்த தொன்மை தெளிவாகின்றது. இதன் பிரகாரம் தமிழை வளர்த்து வந்த பாண்டிய மன்னர்கள் போற்றப்பட வேண்டியவர்கள்.

## தலைச் சங்கம்

தலைச் சங்கம் கடலாற் கொள்ளப்பட்ட தென் மதுரையில் அமைந்து தமிழை ஆராய்ந்து வளர்த்து வந்தது. இதில் இறையனார் என்பவர் தலைமை வகித்தார். இவரை "திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்." என்பர். இச் சங்கத்தில் 4,449 புகழ் பெற்ற புலவர்கள் உறுப்பினராக இருந்து பல பாடல்களை இயற்றினர். அகத்தியனார், இறையனார், குன்றெறிந்த முருகவேள், நிதியின் கிழவன், முரஞ்சியூர் முடிநாகராயர் ஆகியோர் அப்புலவர்களில் ஒரு சிலராவர். அகத்தியம், பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை ஆகியவை அவர்கள் இயற்றிய நூல்களிற் சிலவாகும். இச் சங்கம் 4440 ஆண்டுகள் நிலைத்து வாழ்ந்தபின் கடலன்னையுடன் சங்கமம் ஆகியுள்ளது. இத்துடன் தலைச் சங்க நூல்கள் அத்தனையும் அழிந்துபோய் விட்டன. இக் காலப் பகுதியில் 89 பாண்டிய மன்னர்கள் மதுரையை ஆண்டு சங்கத் தமிழையும் வளர்த்து வந்தனர்.

## இடைச் சங்கம்

இடைச் சங்கம் குமரி ஆறோடு கூடிய கபாடபுரத்தில் அமைந்திருந்தது. இச் சங்கத்துக்கு முருகக் கடவுள் தலைமை வகித்தார். இவரைக் 'குன்றம் எறிந்த குமரவேல்' என்றும் கூறுவர். கிருஷ்ணனும் இச் சங்கத்துக்குத் தலைமை வகித்துள்ளார். இவரைத் 'துவாரக் கோமான்' என்றும் கூறுவர். இச் சங்கத்தில் 3,700 புலவர்கள் தமிழ்ப்பணியாற்றினர். தொல்காப்பியனார், இருந்தையூர்க் கருங்கோழிமோசி, திரையன்மாறன், வெள்ளூர்க் காப்பியன், சிறுபண்டாரங்கள், துவரைக் கோமான், கீரந்தை ஆகியோர் அப்புலவர்களில்



ஒரு சிலராவர். தொல்காப்பியம், குருகு, வெண்டாளி, வியாழமாலை, அகவல், கலி போன்றவை இப்புலவர்கள் இயற்றிய நூல்களில் ஒரு சிலவாகும். இச் சங்கம் 3700 ஆண்டுகள் வாழ்ந்திருந்தது. இக்காலப் பகுதியில் சங்கத்துடன் 59 பாண்டிய மன்னர்கள் தொடர்பு கொண்டு தமிழை வளர்த்தனர். கபாடபுரமும் கடலாற் கொள்ளப்பட்ட பொழுது இடைச் சங்கத்துடன் சேர்ந்த அத்தனை நூல்களும் மாண்டு போயின. ஆனால் தொல்காப்பியம் என்ற நூல் ஒன்றுமட்டும் கடற்கோளில் அகப்படாது தப்பியுள்ளது. மேலும் தொல்காப்பிய நூலுக்கு மூத்த இன்னொரு நூலான திருமூலர் திருமந்திரமும் கடற்கோளில் அகப்படாது

நுணாவிலூர் கா. விசயரத்தினம்
லண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பிக்கொண்டது. இவை ஒரு தெய்வச் செயலாகும்.

## கடைச் சங்கம்

கடைச் சங்கம் உத்தரமதுரையில் நிறுவப்பட்டிருந்தது. இச் சங்கத்தில் 449 புலவர்கள் தமிழ் வளர்ப்பிலும், ஆய்விலும் ஈடுபட்டிருந்தனர். இவர்களுள், சிறுமோதாவியார், சேந்தம்பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர்க்கிழார், இளந்திருமாறன், மதுரை ஆசிரியர் நல்லந்துவனார், மதுரை மருதனிளநாகனார், கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்போர் ஒரு சிலராவர். இப் புலவர்கள் இயற்றிய நூல்களுள் நெடுந்தொகை, நானூறு, நற்றிணை, புறநானூறு, ஐங்குறுநூறு, அகநானூறு, பதிற்றுப்பற்று, 150 கலி, 70 பரிபாடல்,

கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை போன்ற நூல்கள் ஒரு சிலவாகும். இச் சங்கத்தின் வாழ்நாள் 1850 ஆண்டுகளாகும். இக் காலப் பகுதியில் 49 பாண்டிய மன்னர்கள் இச் சங்கத்துடன் தொடர்புட னிருந்து தமிழை வளர்த்தனர். இச் சங்க காலத்தில் சிவபிரான் தன் திருவிளையாடலை ஒரு பாடல் மூலம் தருமி, நக்கீரர் ஆகியோருடன் நடாத்தினார்.

இச் சங்கத்தில் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய பதினெண் மேற்கணக்கு நூல்கள் எழுந்தன. கடைச் சங்க காலத்தில் தமிழ் இலக்கியம் பெரும் புகழீட்டியது. இக் காலம் மதுரை வரலாற்றின் ஊழித் திருப்புமுனை பெற்றிருந்தது. ஆனால் சில தெளிவற்ற சூள்நிலை காரணமாக இச் சங்கம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் நிலை குலைந்து விட்டது. இதன்பின் நாலாம் நூற்றாண்டு முதல் ஏழாம் நூற்றாண்டுவரை சமணர் ஆதிக்கம் மதுரையில் மேலோங்கியிருந்தது. இதே காலப்பகுதியில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், ஐம்பெரும் காப்பியம், ஐஞ்சிறு காப்பியம் ஆகிய நூல்களும் எழுந்தன.

தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வரும் இம் முச்சங்கங்களின் காப்பாளர் பதவியைப் பத்தாயிரம் (10000) ஆண்டுகளாகப் பேணிக் காத்துத் தமிழையும் வளர்த்த பெருமை பாண்டிய மன்னர்களுக்கு உரித்தானமை மேற் கண்டோம். இவர்கள் சேவை போற்றிப் புகழ்ந்து பாராட்ட வேண்டிய செயலாகும்.

## நான்காம் தமிழ்ச் சங்கம்

இனி நான்காம் தமிழ்ச் சங்கம் தோன்றிய வரலாறு பற்றிக் காண்போம். மாண்புடைய கற்றறிவாளரும் மதகுருவுமான 'வச்ரா நந்தி' (Vajra Nandhi) என்பவர் தலைமையில் ஒரு தமிழ்ச் சங்கத்தை மதுரையில் சமணர் உருவாக்கினர். ஆனால் இதை நான்காம் தமிழ்ச் சங்கம் என்று கணிக்கப்படவில்லை. எனவே இதை "வச்ரா நந்தித் தமிழ்ச் சங்கம்" என்ற பெயரில் சிறு காலம்வரை ஓடிக்கொண்டிருந்தது.

இதன் பின் 19 ஆம் நூற்றாண்டில் தமிழர் மத்தியில் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டு உ.வே. சாமிநாதையர், தாமோதரம்பிள்ளை போன்றோர் இருள் நிலையில் மறைவுற்றிருந்த பண்டைய தமிழ் இலக்கியங்களைத் தேடி, ஆராய்ந்து, ஆய்ந்து, அச்சேற்றி, அளப்பரிய தொண்டுகள் பல செய்து உதவினர். தமிழர் தம் பண்டைய புகழ் நிலைக்கு வர விரும்பினர். இந்நிலையில் இளவரசர் பாண்டித்துரைத்தேவரும், வேறு சில கற்றறிவாளரும் சேர்ந்து பிரித்தானிய ஆளுமையிலுள்ள இந்தியாவின் மதுரையில் 14-09-1901 ஆம் திகதியன்று மதுரை சேதுபதி உயர் பாடசாலையில் ஒரு தமிழ்ச் சங்கத்தை ஆரம்பித்து நடாத்தி வந்தனர். இச் சங்கத்தின் முதற் கூட்டத்தில் பேரறிஞர்கள் உ.வே. சுவாமிநாத ஐயர், மறைமலை அடிகள், இராகவ ஐயங்கார், சொல்வேந்தர் சண்முகம்பிள்ளை, திருமயிலை சண்முகம்பிள்ளை, எம். எஸ். பூர்ணலிங்கபிள்ளை ஆகிய பலர் பங்குபற்றிப் பாண்டித்துரைத்தேவரைப் பாராட்டிச் சென்றனர்.

இதற்குமுன் முச்சங்கங்கள் இருந்தமை காரணமாக இச் சங்கத்தை நான்காம் மதுரைத் தமிழ்ச் சங்கம் என ஏற்றுக்கொள்ளப்பட்டது. இச் சங்கம் தமிழ்ப் பண்டிதர் பட்டமளிப்புக்குரிய சோதனைகளை நடாத்தி வந்தது. 1867 ஆம் ஆண்டு பிறந்த இளவரசர்

பாண்டித்துரைத்தேவர் இச் சங்கத்தின் காப்பாளராகவும், தலைவராகவும் பத்து ஆண்டுகள் பணியாற்றித் தனது நாற்பத்தைந்தாவது (45) வயதில் 11-12-1911 ஆம் திகதியன்று காலமானார். இவர் இறப்பால் தமிழ் நாட்டினர் தாங்கொணாக் கவலையில் ஆழ்ந்தனர். இவரின்பின் இச் சங்க நிலைப்பாடுகள் அனைத்தும் முன்போலன்றித் தேக்கநிலையடைந்து விட்டன.

இனி மீண்டும் ஒரு நாலாம் சங்கம் உதயமாக வேண்டும். இச் சங்கத்தின் தேவை மக்களின் தேவையாக வேண்டும். எனவே முச் சங்கங்களை ஒத்த நாலாம் சங்கம் ஒன்று இந்தியாவின் புகழ் பூத்து நிற்கும் மதுரை மாநகரில் சிறந்த புலவர் குழாம் ஒன்றுடன் தமிழ் நாட்டு அரசின் ஆதரவில் இலக்கிய மணம் பரவிப் பல்லாண்டு நிலைத்து வாழ்ந்து மக்களை நாடிச் சென்று அவர்தம் வாழ்வியலை அலங்கரித்து நிற்க வேண்டுமெனத் தமிழ் நாட்டு அறிஞர்களைத் தமிழுலகம் இறைஞ்சுதல் வேண்டி நிற்கின்றது. ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Tooting-ல் தமிழருக்கான முதல் கடை**




**118, Tooting High Street, London SW 17 ORR**
**Tel : 020 8682 3777**

நம்மவரின் வசதிக்கேற்ப எமது கடையை விஸ்தரித்துள்ளோம்.
உங்களுக்கு வேண்டிய சகல தெரிவுகளும் எங்கள் புதிய காட்சியறையில் உள்ளன.



இலண்டனில் தரமான தங்கத்திற்கு

# PATHMINI
# JEWELLERS

**892 London Road**
**Thornton Heath**
**Surrey CR7 7PB**
**Tel : 020 8665 1111**
**Fax : 020 8664 8999**






மாபெரும் 5 -வது கிளை

கிழக்கு லண்டனில் எதிர்பாருங்கள் !!!

**Best Foods**

**11-13 Ealing Road**
**Wembley**
**Middlesex HAO 4AA**

**249 Northolt Road Harrow**
**Middlesex HA2 8HR**
**Tel : 020 8423 9933**

**259 - 261, London Road**
**West Croydon Surrey CRO 2RL**
**Tel : 020 8684 6269/ Fax : 684 4677**

**364 - 366, Bath Road, Hounslow**
**Middlesex TW4 7HT**
**Tel : 020 8577 6002 Fax : 020 8570 2323**